**இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனி - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன. எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் இன் நிதிக்கூற்றுக்கள் குறித்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குழுமத்தினதும் சபையினதும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

---

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையினதும் குழுமத்தினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையும் குழுமமும் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையினதும் குழுமத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையினதும் குழுமத்தினதும் செயற்பாடுகளை தொடரச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையினதும் குழுமத்தினதும் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையும் குழுமமும் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையினதும் குழுமத்தினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| தொடர்புடைய உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) நிதிசார் அறிக்கையிடலுக்கான எண்ணக்கருவாக்க சட்டகம்**<br>i. சட்டகத்தின் 4.1 (ஆ) பந்திக்கு முரணாக, சபைக்கு ஏற்பட்ட கிரயத்திற்கும் குறிப்பிட்ட வருமான உழைப்புக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லாத மற்றும் தனிப்பட்ட நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளான ரூபா 43.97 மில்லியன் தொகையான செலவுகள் சபையின் வருமானக் கூற்றில் அதற்குரிய செலவினமாக இனங்காணப்பட்டிருந்தது.<br><br>ii. சட்டகத்தின் 4.3 ஆம் பந்திக்கு முரணாக, சபைக்கு பொருளாதார நலன்களை உட்பாச்சல் செய்யாத மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் | சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியத்தை நிறுவும் அதிகாரத்தை இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 12 (த), சபைக்கு வழங்கியுள்ளது. எனவே, இ.மி.ச. இன் ஊழியர்களுக்கான சேமலாப நிதியத்தை நிறுவுதல் என்பது இ.மி.ச. இன் தீர்மானமாகும்.<br><br>2003 திசெம்பர் 31 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேமலாப நிதியத்தின் 5 ஆம் இலக்க விதியின் படி, சபையால் நியமிக்கப்பட்ட குழுவால் நிதியம் முகாமை செய்யப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றமையால் நிதியத்தை முகாமைத்துவம் செய்து நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு சபைக்கு காணப்படுகின்றது. ஆகையால், நிதியத்தை | நிறுவனத்துடன் தொடர்புடைய செலவினத்தை இனங்காண்பதற்கும் நிறுவனத்தின் நோக்கத்திற்காக சொத்துக்களை பய ன்படுத்துவதற்கும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளு டன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சொத்தின் உரிமையும் சபைக்குக் காணப்படுகின்ற ரூபா 8 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் வேறொரு நிறுவனத்தால் பயன்படுத்தப்படுகின்றன. | முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கான செலவுகள் இ.மி.ச. ஆல் பொறுப் பேற்கப்படுகின்றது.<br><br>மேலும், மேற்படி விதிகளின் 20 (i) ஆம் இலக்க உட்பிரிவின் படி, வீட்டுக் கடன்களை பரிசோதிப்பதுடன் தொடர்புடைய செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் அனைத்து நிர்வாகச் செலவுகளும், இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுவதுடன் இந்தக் கொள்கை நிதியத்தின் ஆரம்பத்தில் இருந்தே (1969 நவம்பர் 01 முதல்) நடைமுறையில் இருக்கின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.<br><br>இந்த விடயம் நிதியத்தின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் 2021 பெப்ரவரி 11 இல் முன்வைக்கப்பட்டது, அதற்கமைய தற்போதைய நடைமுறையினை தொடர்வதற்கு குழு தீர்மானித்ததுடன், அதற்காக சபையின் ஒப்புதலை பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆதற்கமைய, ஒரு சபை விஞ்ஞாபனம் இ.மி.ச. இன் பணிப்பாளர் சபைக்கு (தொடர்பு இல. 2021.03.29 ஆம் திகதிய ஏஎவ்எம்(ரீஎம்) / டிஎவ்எம் (சேமலாப மற்றும் ஓய்வூதிய நிதியம்) / ஏடிஎம்/ 2021/ 01) சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த விடயத்தை விரிவாகக் கருத்தில் கொண்டு, நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகளைச் செய்வதற்கான தற்போதைய கொள்கையைத் தொடர்வதற்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது. | |
| (iii) சொத்தின் உரிமையுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இன்மை காரணமாக தலைமை அலுவலகக் கட்டிடக் காணியின் உரிமைத்துவத்தை மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது. | இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் உரிமைக்கான உரிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. எனவே, இ.மி.ச. இன் தலைமை அலுவலக கட்டிடத்தின் உரிமையை உருவாக்கவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு இ.மி.ச. காணிகள் ஆணையாளரைக் கோரியுள்ளது. | தலைமை அலுவ லக கட்டிடத்தின் உரிமையை உரு வாக்கவதற்குத் தேவையான ஏற்பா டுகளை மேற்கொ ள்ள வேண்டும். |
| **(ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br>இ.மி.ச ஆனது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் | எல்கேஏஎஸ் - 2 இருப்புக்கள் என்பதன் 25 ஆம் பந்தியின்படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை முதல் வந்தது முதல் செல்லல் முறை (FIFO) அல்லது நிறையளித்த சராசரி முறை பரிந்துரைக்கப்படுகின்றது. ஒரு | இருப்பை பெறுமதி யிடுகையில் உண்மைக் கிரயம் அல்லது அண்ணள வான கிரய அடிப் படை பிரயோகிக் |

கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 4,038,696,594 கூட்டுத் தொகையான சாதக பொருள் விலை முரண்கள் மற்றும் சாதக மேந்தலை விகித முரண்களும் ரூபா 1,776,858,186 பாதக களஞ்சிய விலை முரண்களும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

இதன் விளைவாக, இ.மி.ச. இன் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

நிறுவனம், அந்த நிறுவனத்திற்கு ஒத்த தன்மையுடைய மற்றும் பயன்பாடுடைய அனைத்து இருப்புகளுக்கும் ஒரே கிரய சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதன்படி, இ.மி.ச. அதன் இருப்புகளை மதிப்பிடுவதற்கு FIFO முறையைப் பயன்படுத்துவதுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 77% நடைபெறும வேலைகள், 63% ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் 45% இருப்புக்களை உள்ளடக்கிய இ.மி.ச. இன் பிறப்பாக்கம், பரிமாற்றம், சொத்து முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பிரிவிலுள்ள ஊழியக் கிரயத்தை பதிவு செய்ய உண்மையான கிரய முறை பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஆதனம், பொறி மற்றும் உபகரணம், இருப்புகள் மற்றும் முடிவுறா வேலைகள் ஆகியவற்றின் பெரும்பகுதி தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க கிரயத்தில் வழங்கப்படுகிறது.

இருப்பினும், இருப்புகளின் சிக்கலான தன்மை மற்றும் பெரிய அளவுகள் காரணமாக, இ.மி.ச. இல் உள்ள விநியோக பிரிவுகள் வேறுபட்ட கிரய நுட்பங்களை பயன்படுத்துவதுடன் அது நியமக் கிரய முறையாகும். LKAS 2 இன் 21 ஆம் பந்தியின்படி, கிரயத்தை கிட்டியதாக முடிவுகள் காணப்பட்டால், நியமக் கிரய முறையை இருப்புகளின் விலையை அளவிடுவதற்கான நுட்பமாக வசதிக்கேற்ப பயன்படுத்தப்படலாம். மீளாய்வாண்டில், மொத்த நிகர விலை முரண் ரூபா 347 மில்லியன் (வரவு) ஆகக் காணப்பட்டதுடன், இது மொத்த கொள்வனவுப் பெறுமதியில் அதாவது GRN மதிப்பில் 0.3% ஆகும். எனவே, நியம விலையானது கிரத்திற்கு கிட்டியதாக இருப்பதை இது தெளிவாகக் குறிக்கிறது.

எனவே, ஆண்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறை நியாயமானதுடன் தொடர்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குவதாக இ.மி.ச. கருதுகிறது.

**மேந்தலைக் கிரயம்**

வருடாந்தம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மூலதன வேலைகளுக்கு மேந்தலைக் கிரயத்தை உறிஞ்சுதல் இ.மி.ச. விநியோகப் பிரிவுகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. நிர்மாண வேலைகளுடன் நேரடியாக தொடர்புடைய ஒவ்வொரு பிரிவினதும் பாதிடப்பட்ட கிரயத்தை பயன்படுத்தி வருடாந்த

கப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | மேந்தலை உறிஞ்சுதல் விகிதம் கணிப்பிடப்படுகின்றது. பாதிடப்பட்ட கிரயத்தை விநியோகப் பிரிவுகளின் உண்மையான கிரயத்தோடு ஒப்பிடும் போது, உண்மையான கிரயங்கள் பாதிடப்பட்ட கிரயங்களை 10% ஆல் விஞ்சியிருந்தமை கண்டறியப்பட்டது. எனவே, பயன்படுத்தப்படும் மேல்நிலை உறிஞ்சுதல் விகிதமும் நியாயமானது. | |
| **(இ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**<br>பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172.2 பில்லியன் சொத்துக்களில் ரூபா 171.2 பில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அசையும் நிலையான சொத்துக்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வின் தேவைக்கு வழங்குவதற்காக பதிவுகள் செய்யப்பட்டன. முக்கியமாக தற்போதுள்ள பரிமாற்று வழிகளுடன் சம்பந்தப்பட்டு தற்போது நாட்டிற்கு தொடர்ச்சியாக மின் எரிசக்தியை வழங்குவதற்காக மின்சார பரிமாற்ற வலைப்பின்னலின் ஒரு பகுதியாக உள்ள பொறிகள் மற்றும் இயந்திரங்களே அசைவுறாத சொத்துக்களாக காணப்படுகின்றன. | **LKAS 16** இன் பிரகாரம் ஆண்டு தோறும் நிலை யான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| **(ஈ) எல்கேஏஎஸ் 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**<br>சபை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் அதன் மீதான மேன்முறை யீட்டின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா 50 மில்லியன் தொகையினை வெளிப்படுத்தியிரு க்கவில்லை. | மின்சாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை பற்றி செய்தித்தாள்களில் செய்தி வெளியானதால் தனது நற்பெயருக்கு பங்கமேற்பட்டதாகக் குறிப்பிட்டு திருமதி ஜானகி நெத்திகுமாரி இ.மி.ச. இற்கு எதிராக கடுவல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல. 259/M இன் கீழ் ரூபா 50 மில்லியன் இழப்பீடு கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். சாட்சிகளை கருத்திற் கொண்டதன் பின்னர், கடுவெல மாவட்ட நீதிமன்ற நீதிபதியால் 2019.08.22 இல் தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் ரூபா 50 மில்லியன் தொகையை வாதிக்கு வழங்குமாறு இ.மி.ச. இற்கு உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை தள்ளுபடி செய்வதற்காக தீர்ப்புக்கு எதிராக இ.மி.ச. மேன்முறையீடு செய்துள்ளது. எதிர்காலத்தில் இந்த வழக்கை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் தேவை ப்பாட்டின் படி உரிய விடயம் வெளிப்ப டுத்தப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இ.மி.ச. இனால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக தேய்விடப்பட்ட நடைமுறையல்லா சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கை 2.4.6(உ) மற்றும் 3(இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளாய்வு | முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 53% க்கும் அதிகமானவை மின்வலு பிறப்பாக்க பொறிகள் மற்றும் தொடர்புடைய சொத்துக்களைக் கொண்டுள்ளன. முழுமையாக தேய்விடப்பட்ட மின் நிலையங்களின் பயனுள்ள | முழுமையாக தேய்விட ப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு பின்னோக்கி சீராக்கப்பட்டிருக்கவில்லை.<br>எடுத்துக்காட்டாக ரூபா 187.58 பில்லியன் தொகையான முழுமையாகத் தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் உண்மையான ஆயுட்காலம் மதிப்பிடப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. | ஆயுட்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையத்தின் சிக்கலான தன்மை மற்றும் தனித்துவத் தன்மை காரணமாக, மதிப்பீட்டிற்கு கணிசமான காலம் தேவைப்படுகின்றது.<br><br>மோட்டார் வாகனங்களுக்கான திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்தை நடைமுறைப்படுத்துதல் 2021 ஆம் ஆண்டில் சபையின் ஒப்புதலுடன் செய்யப்படும்.<br>எஞ்சிய சொத்துக்களின் பிரதான கூறுகள் பரிமாற்ற மற்றும் விநியோக வழிகளாக காணப்படுவதுடன், இது முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களில் 38% ஆகும். கணக்காய்வு அவதானிப்பை தீர்வு காண்பதற்கான ஒரு பொறிமுறையினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 189.54 மில்லியன் வரவு மீதி (இருப்பு குறைவு) மற்றும் ரூபா 114.64 மில்லியன் செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | இருப்புச் சீராக்கத்தை அகற்றுவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• விடயங்களைத் தீர்ப்பதற்காக குழுக்களை நியமித்தல்<br>• பொறுப்புவாய்ந்த ஊழியர்களுக்கு எதிராக முறையான விசாரணைகளை நடத்துதல்<br>• சட்ட ஆலோசனைகளை பெறுதல், மற்றும்<br>• சபை விஞ்ஞாபனங்களை சமர்ப்பித்தல்.<br>அதன்படி, பற்றாக்குறை இருப்பு மீதியில் 46% இற்கு மேற்பட்டவையும் மேலதிக இருப்பு மீதியில் 30% இற்கு மேற்பட்டவையும் மேற்படி செயன் முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | இருப்பு மிகை மற்றும் பற்றாக்கு றையினை அது இடம்பெற்று குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அமைச்சரவையின் 2010 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு ஆலையின் நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159.18 மில்லியன் கடன் தொகை திறைசேரியினால் லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிட்ட் (எல்சிசி) இற்கு மாற்றப்பட வேண்டுமென்பதுடன் எல்சிசி இற்கான கடன் சேவைக்காக அதற்குச் சமமான தொகையினை இ.மி.ச. | வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் - 2014 இனை அமுல்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட PE/EN/CEB/Equity/2014 ஆம் இலக்க 2014-09-30 திகதியிட்ட கடிதத்தின் படி, திறைசேரி செயலாளரால் கடனை உரிமைத்துவத்துக்கு மாற்றுதல் கையொப்பமிடப்பட்டது. புத்தளம் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்துக்காக பெறப்பட்ட அனைத்து | திறைசேரிச் செயற் பாடுகள் திணைக் களத்திடமிருந்து எழுத்து மூலமான பணிப்புரை கிடைத் தவுடன் அல்லது நிலுவையான மீதி களைச் செலுத்து வதற்காக இ.மி.ச இன் |

செலுத்துதல் வேண்டும். திறைசேரியின் செயலாளரால் வழங்கப்பட்ட PE/EN/CEB/Equity/2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி, இக்கடன்கள் இ.மி.ச. இன் நேரடிக் கடன்களாகக் கருதப்படுதல் வேண்டும். இருப்பினும், இ.மி.ச. பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப் பட்டிருக்காத போதிலும், இக்கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆகையால், இக்கடன்களின் காணப்படும் தன்மை ஐயத்திற்குரியதாக உள்ளதுடன் இக்கடன்களின் மீளச் செலுத்துகை தொடர்பில் நிதிக் கூற்றுக்களிற்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

மேலும், ரூபா 3.56 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.5 பில்லியன் ஆனதோர் தொகை மற்றும் திறைசேரியால் செய்யப்பட்ட ரூபா 3.15 பில்லியன் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட ரூபா 20.54 பில்லியன் தொகை என்பன முறையே 2019 மற்றும் 2020 இல் இ.மி.ச. இன் உரிமைத்துவத்திற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், இந்த செலவினம் இ.மி.ச. ஆல் செய்யப்படாத போதிலும், உரிமைத்துவத்திற்கு வட்டி என மாற்றப்பட்டிருந்த இந்த வட்டிச் செலவினத்தை இ.மி.ச. அதன் வருமானக் கூற்றிற்கு சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான நட்டம் முறையே ரூபா 3.56 பில்லியன் மற்றும் ரூபா 3.15 பில்லியன் ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

மேலும், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின 42 (6) ஆம் பிரிவில் அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் உத்தரவாதத்துடன் சபைக்கு வழங்கப்பட்ட கடன்களை இலங்கை ரூபாவுக்கு மீள்மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடைய எந்த இழப்பும் அல்லது இலாபமும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு திரட்டிய நிதியத்துக்கு சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், சபை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அதன் வருமான கூற்றில் முறையே ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகையினை நாணயமாற்று இழப்பாக சாட்டியிருந்தது. ஆகையால், 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்கான நட்டங்கள் முறையே கடன்களும் இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதப்பட வேண்டுமென இ.மி.ச. அறிவுறுத்தப் பட்டதுடன் இந்த கடன்களுக்கான கடன்சேவையினை வழங்குவதற்கு நிலவுகின்ற திரவத்தன்மை பிரச்சினை காரணமாக இ.மி.ச. இற்கு கடன் சேவைச் செலவைச் சமாளிக்கும் நிலை ஏற்படும் வரை திறைசேரியினால் இந்நடவடிக்கை தொடரப்படும்.

மேலும், இக்கடனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இ.மி.ச. இன் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள மையால் 2018-01-11 அன்று பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி கடன்களைச் இ.மி.ச. இற்கு வழங்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டது.

கடன் ஒப்பந்தமானது ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கும் அந்தந்த கடன்களை வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்திடப்பட்டுள்ளதால், கடனை இ.மி.ச. இற்கு மாற்றுவதற்கு திறைசேரி தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் வரை இக்கடன் திறைசேரியின் பொறுப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட 2019-10-17 திகதியிட்ட PEP/I/CEB/2/II (i) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திறைசேரியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, இமி.ச. ரூபா 16,942,798,790.95 வட்டியுடன் சேர்த்து ரூபா 3,556,442,931.30 மூலதனத் தொகையினை 2019 ஆம் ஆண்டிற்கான இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கியுள்ளது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட PED/1/CEB/02/11 (i) ஆம் இலக்க 15.01.2021 திகதியிட்ட கடிதத்தின் பிரகாரம், ரூபா 20,536,545,932.04 தொகையினை பொது முயற்சிகள் திணைக்களத்தின் பதிவுகளுக்கு அமைய இ.மி.ச. அதன் புத்தகங்களில் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவதற்கு மாற்றியுள்ளது. அதன்படி, திறைசேரியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய இ.மி.ச. இன் புத்தகங்கள் சீராக்கப்பட்டுள்ளன.

புத்தகங்களைச் சீராக்கு வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ரூபா 11.89 பில்லியன் மற்றும் ரூபா 20.86 மில்லியன் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 42 இலுள்ள உப பிரிவு 6 இன் அடிப்படையில், இலங்கை அரசாங்கமே நாணயமாற்று வீத ஆபத்தை பொறுப்பேற்பதனால், திறைசேரியின் ஊடாக பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான மூலதனம் மற்றும் வட்டி ஆகியவற்றுக்கான அந்நிய செலாவணி ஏற்ற இறக்கங்களால் எழும் இலாபங்கள் அல்லது இழப்புகளை சபை கணக்கிடுவதில்லை. சயையால் கடன்கள் பெறப்படும் போது ஒப்புக்கொள்ளப்பட்ட நாணயமாற்று விகிதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகள் மதிப்பிடப்படுகின்றன.

எவ்வாறாயினும், இந்த செலவை ஈடுகட்டுவதற்காக, இ.மி.ச. இன் சார்பாக அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன்களின் இழப்புகளை ஈடுசெய்யும் வட்டி விகிதத்தில் இ.மி.ச. உடன் ஒரு உப கடன் ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையெழுத்திடுகின்றது.

இக்கடன்களை இ.மி.ச. ஆல் பெறப்பட்ட நேரடிக் கடன்களாக கருதுவதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமையால், அத்தகைய உப கடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவில்லை. இ.மி.ச. இன் திரவத்தன்மை கட்டுப்பாடுகள் காரணமாக திறைசேரியால் கடன் சேவை செலவுகள் செய்யப்படுவதால், கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட உண்மையான பணத்தொகை கடன் உரிமைத்துவமாக இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டது.

இ.மி.ச. இந்த கடன்களை ஆரம்பத்தில் சட்டத்திற்கு இணையாக பெறப்பட்ட விகிதத்தில் பதிவு செய்துள்ளமையாலும் அதன்பின்னர் கடன்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமையாலும், மூலதன திருப்பிச் செலுத்துதல் தொடர்பான நாணயமாற்று இழப்பானது திறைசேரி யினால் செய்யப்பட்ட கடனுக்கான உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட் டுள்ளது. அதன்படி, 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 20,862,022.88 நாணயமமாற்று இழப்பானது 2020 ஆம் நிதியாண்டில் கூட்டிணைக்கப்பட்டு ள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு இறுதி

வரையான நாணயமாற்று விகித விலகலுடன் தொடர்புடைய ரூபா 6,154,069,044.78 நாணயமாற்று இழப்புத் தொகை 2019 ஆம் ஆண்டுக்கு சீராக்கப்பட்டது.

மேலும், 2019 ஆம் ஆண்டில் கடன் திருப்பிச் செலுத்துதலாக கணக்கிடப்பட்டுள்ள ரூபா 5,735,412,848.45 தொகை 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன் உரிமைத்துவ மாற்றத்தில் சேர்க்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான மொத்தம் ரூபா 11,889,481,893.00 நாணயமாற்று இழப்பாக 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டது.

(இ) 2014 திசெம்பர் 31 இற்கு பின்னர் திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் உப கடன்களாக கருதப்பட்டிருக்காத போதிலும், ரூபா 25.23 பில்லியன் கடன் தொகையினை 2014 இற்கு பின்னர் செயற்திட்டங்களிற்கான உப கடன்களாக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த வெளிநாட்டு கடன்கள் என இ.மி.ச. பதிவுசெய்திருந்தது. மேலும், 2015 மார்ச் 18 ஆந் திகதிய 15/0228/613/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துதல் இ.மி.ச. இற்கு ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், இந்த கடன்களுக்கான மூலதன திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி செலுத்துதல் தொடர்பில் எவ்வித கொடுப்பனவையும் இ.மி.ச. செலுத்தவில்லை அல்லது அதற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் திருப்பிச் செலுத்தும் நிலைமைகள் (மூலதனம் மற்றும் வட்டி செலுத்துதல்) மீதான நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை.

வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கடன் சேவை வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் கணக்கீடு தொடர்பில் நிதி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 2015-03-18 தேதியிட்ட அமைச்சரவை ஞாபனக்குறிப்பு மற்றும் இது குறித்த 2015-03-09 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு முதல் சேவை மேற்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இ.மி.ச. எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டிருந்தாலும், இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டதால், ஆரம்பத்தில் இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பொது முயற்சிகள் திணைக்களத்தில் 2018-01-11 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2014.12.31 இற்குப் பின்னர் பொது திறைசேரியின் ஊடாக இ.மி.ச. இற்கு வழங்கப்பட்ட கடன்களை அமைச்சரவை ஒப்புதலுடன் இலங்கை அரசாங்கத்தின் உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

எனவே, இந்த நிலுவைத் தொகையை உரிமைத்துவத்திற்கு மாற்றுவதற்கான திறைசேரியின் வழிகாட்டல் கிடைக்கும் வரை இ.மி.ச. அதை திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்துள்ளது.

தேவையான விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஈ) பொதுத் திறைசேரியுடன் எவ்வித உப கடன் உடன்படிக்கைளிலும் கைச்சாத்திட்டிருக்காத போதிலும், ரூபா 54.71 பில்லியன் பெறுமதியான ஆறு வெளிநாட்டுக் கடன்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட கடன்களாக சபையின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனவே, இந்தக் கடன்களின் காணப்படு தன்மை ஐயத்துக்குரியதாக உள்ளதுடன் இக் கடன்களின் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் நிதிக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை. | திறைசேரியுடன் உப கடன் உடன்படிக்கைகள் முடிவுறுத்தப் பட்டிருக்காத போதிலும், திறைசேரியின் ஊடாக இ.மி.ச. சார்பாக அக்கடன்கள் பெறப்பட்டுள்ளன.<br><br>இ.மி.ச. சார்பாக பெறப்பட்டதால், இந்த கொடுப்பனவுகள் திறைசேரிக்குரிய ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்பட்டன. மேலும், இலங்கை அரசாங்கத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கும் இடையே கடன் ஒப்பந்தங்கள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளன. | பொதுத் திறைசேரி யுடன் உப கடன் உடன்படிக்கைளில் கைச்சாத்திடுதல் வேண்டும். |
| (உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைப்பட்டியல் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66.99 மில்லியனால் ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலுவையிலுள்ள மீதிகளிற்கான தீர்ப்பனவு விபரங்கள் மற்றும் பட்டியல்களை இ.மி.ச. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | இ.மி.ச. ஆல் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் அரச மருத்துவமனைகளில் இருந்து பெறப்பட வேண்டியவைகளை அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் சந்தேகத்திற்குரியதாக இருப்பதால், 2013 க்கு முன்னர், அந்த வருவாய்கள் காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டதுடன், வாடிக்கையாள ரிடமிருந்து பணம் சேகரிக்கப்படும் வரை வேலைகளின் உண்மையான கிரயம் கணக்கு புத்தகங்களில் பெறத்தக்கதாக காட்டப்பட்டது. 2020-12-31 நிலவரப்படி, அரசு நிறுவனங்களுக்காக மேற்கொள்ள ப்படும் வேலைகளின் உண்மையான கிரயத்திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 43,421,695.18 ஆனதுடன் அது ஐயவினாவில் கூறப்பட்டுள்ளபடி ரூபா 66,987,761 அல்ல.<br><br>எனினும், 2020-10-06 ஆந் திகதி இடம்பெற்ற 20.14.279 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் வழங்கப்பட்ட சபை வழிகாட்டுதலின் படி, இ.மி.ச. இன் பொது முகாமையாளர், அவரது 2020-12-21 தேதியிட்ட CEB/FM/AFM (Corp)/DFM (P&I)/கடன்பட்டோர் கடிதத்தின் மூலம், இ.மி.ச. எதிர்கொண்டுள்ள திரவத்தன்மை சிக்கல்களைச் சமாளிப்பதற்காக அரசு நிறுவனங்களிடமிருந்து நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகையை திரும்பப் பெறுவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது உதவியை நாடியுள்ளார். இதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. | பதியப்படாத பட்டி யல்களை பெறுமதி யிட்டு கணக்கீடு செய்தல் வேண் டும். |

மேலும், தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பிறகும் சொத்துகள் முகாமைத்துவப் பிரிவால் அரசு நிறுவனங்களில் இருந்து நிலுவையாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை காணப்படுவதால் அவற்றை பதிவழிப்பதற்காக ஒரு சபை விஞ்ஞாபனத்தை வரைவதற்கு 2020.12.21 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் 2020/03 இன் 03.03 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் கீழ் கணக்காய்வுக் குழு பணிப்புரை வழங்கியதுடன் 2021.04.07 ஆந் திகதி இடம்பெற்ற சபை கூட்டத்தில் சபை கூட்டக்குறிப்பு இல. 21.06.128A இன் கீழ் அது சபையால் உறுதி செய்யப்பட்டது. அதன்படி, பிரதிப் பொது முகாமையாளர் (டபிள்யூ & ஏஎஸ்) இது தொடர்பாக ஒரு சபை விஞ்ஞாபனத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த பெறவேண்டிய மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 9 - நிதிக் கருவிகள் என்பதன் கீழுள்ள பிரிவு 5.5.4 இற்கு இணங்க இ.மி.ச. இந்த நிலுவைகள் மீது முழுமையான நட்டக்கடன் ஏற்பாட்டை செய்துள்ளது.

மேலும், மீதிகளின் அறவிடல் சாத்தியம் தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றமையால் ஐயவினாவில் குறிப்பிட்டுள்ளபடி SLFRS 15 - ஒப்பந்த வருவாய் இன் பிரிவு (9) (உ) ஆனது பெறத்தக்க நிலுவைத் தொகையை (அதாவது, விலைப்பட்டியல் பெறுமதி) மீளவைப்பதற்கு பரிந்துரைக்கவில்லை. மேற்குறித்த வேலைகளின் விலைப் பட்டியல் பெறுமதிகளை அங்கீகரிப்பதற்காக கிரயத்தில் கூறப்பட்ட பெறவேண்டியவை கணக்குகளில் மீளவைக்கப்பட்டாலும் கூட, SLFRS 9 - நிதி கருவிகளின் பிரிவு 5.5.4 இல் உள்ள விதிகளின் படி 100% நட்டக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அதன்படி, (பெறவேண்டியவை மற்றும் நிறுத்திவைத்த உழைப்புக்களை அதிகரித்து) விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளவைத்தாலும் கூட இத்தகைய நிலுவைத் தொகை அறவிடப்படாமையால், நட்டக்கடன் ஏற்பாட்டை

| | | |
|---|---|---|
| | (பெறவேண்டியவை மற்றும் நிறுத்தி வைத்த உழைப்புக்களை குறைப்பதற்கு) அங்கீகரிக்க வழிவகுக்கும்.<br><br>இது இ.மி.ச. இன் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதனால் மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, விலைப்பட்டியல் பெறுமதிகளை மீளமைப்பது மேலே குறிப்பிட்ட கணக்கீட்டு நியமங்களுடன் தொடர்புடைய விதிகளுகளுடன் இணங்காது காணப்படும். எனவே, கணக்காய்வு ஐயவினாவில் கூறப்பட்டுள்ளபடி நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு குறைத்துக்கூறலும் காணப்படவில்லை.<br><br>கணக்காய்விற்கு கோரப்பட்ட பெரும்பாலான தகவல்கள் ஏற்கனவே அந்தந்த பிரிவுகளின் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக தகவல்களை அவர்களிடமிருந்து திரட்டிக் கொள்ளலாம். | |
| (ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்துதல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1.5 பில்லியன் தொகை நிறுத்திவைத்த உழைப்புக்களிற்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.0 பில்லியன் தொகையினை உரிமைத்து வத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோராகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், பொது பொதுத் திறைசேரியிடமிருந்து இ.மி.ச. ஆல் எந்தவொரு முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | 2019.10.16 ஆந் திகதிய PDE/I/CEB/2/11/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இந்த கொடுப்பனவு திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ”முகாமைத்துவக் கட்டணம்” என்று கருதப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டு காலப்பகுதியில் காலத் தேய்மானம் செய்யப்பட்டது. | 2016 இல் பொதுத் திறைசேரியினால் விதிக்கப்பட்ட தீர்வைக்காக செலுத்திய ரூபா 5 பில்லியன் தொகை உரிமைத்துவக் கூற்றில் காண்பிக் கப்படுதல் வேண்டும். |
| (எ) விநியோக பிரிவிலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 6.18 பில்லியன் மதிப்புள்ள 7,546 பூரணப்படுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றிற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | பூரணப்படுத்திய வேலைகளை சரியான நேரத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு மூலதனமாக்குவதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மூலதன வேலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்படைக்கவும் | பூரணப்படுத்திய வேலைகளை மூல தனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாகாண அளவிலான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2021 மே 31 இல் உள்ளவாறு கடந்த 4 ஆண்டுகளில் DD1 ஆனது 21% இனை மூலதனமாக்கியதுடன், DD3 ஆனது 28% இனை மூலதனமாக்கியது. | |
| (ஏ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்திட்டம் தொடர்பான ரூபா 979.88 மில்லியன் மொத்தக் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இத்திகதி வரை நடைபெறும் வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த உழைப்புகள் என்பன முறையே ரூபா 27.99 மில்லியன் மற்றும் ரூபா 195.98 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | ஆரம்ப சொத்து பரிமாற்றத்திற்குப் பின்னர் 2020 திசெம்பர் வரை ரூபா 979,888,779 செலவுகள் நடைபெறும் வேலைகள் கணக்கில் திரண்டுள்ளது. இந்தத் தொகை பிரதானமாக பணியாளர் செலவுகள், நடுவர் தீர்ப்புக்கான சட்டக் கட்டணம் மற்றும் காணிச் சுவீகரிப்புச் செலவு போன்றவற்றைக் கொண்டுள்ளது. மீதமுள்ள தொகையை மாற்றுவதற்காக செயற்திட்ட அலுவலகத்தில் நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இது 2021 ஆம் ஆண்டிற்குள் பூரணப்படுத்தப்படும். | குறித்த செலவினத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179.19 மில்லியன் மொத்தக் கிரயம் கொண்ட வாகனங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக இதுவரை முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே நிறுத்திவைத்த உழைப்புகள் ரூபா 179.19 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | ஆரம்ப சொத்து பரிமாற்றத்தற்குப் பின்னர் திரண்டிருந்த ரூபா 528,013,647.76 தொகையான செலவு 2020 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்பட்டது. இருப்பினும், வாகனங்களின் கொள்வனவுக்காக ஏற்பட்டிருந்த 179,194,890 ஆனது வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்படாமை காரணமாக (10 வாகனங்கள்) கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த வாகனங்களின் உரிமை இ.மி.ச. இற்கு மாற்றப்பட்ட பின்னர் இத்தொகை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்றப்படும். | குறித்த வாகனங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) பதிவழிக்கப்பட்ட மீதிகளுக்கு எதிராக இறுதியாக்கப்பட்ட மொத்த வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 18.76 மில்லியன் வட்டி வருமானம், பெ.சே.வ. மற்றும் மிகைக்கட்டணம் என்பன கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனவே கடன்பட்டோர் மீதிகள் ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) ரூபா 30.56 மில்லியன் தொகையான வீதி விளக்கு பராமரிப்பு செலவுகளின் அறவிட முடியாமைக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைகளால் செய்யப்படும் வீதி விளக்கு பராமரிப்பு செலவுகள் இ.மி.ச. இனால் மீளளிக்கப்படுவதுடன் அவை மின்வலு அமைச்சிடமிருந்து பெறவேண்டியதாக பதிவு செய்யப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட மீதியானது 2013 ஆம் ஆண்டு முதல் தென் மாகாணத்தால் வழங்கப்பட்ட | குறித்த தொகையின் அறவீட்டுச் சாத்தியம் குறித்து மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் தேவையான ஏற்பாட்டை செய்தல் |

| | | |
|---|---|---|
| | மீளளித்தல்கள் தொடர்பான திரண்ட மீதி ஆகும். இருப்பினும், மேற்குறித்த நிலுவைத் தொகைக்கு அமைச்சிலிருந்து இதுவரை நிதி கிடைக்கவில்லை. எனவே, மேற்படி செலவுகளை எதிர்காலத்தில் மீளளிப்பதில்லை என்ற தீர்மானத்தை தென் மாகாணம் எடுத்துள்ளது. | வேண்டும். |
| (ஓள) ரூபா 29.97 மில்லியன் செலுத்த வேண்டிய மீதி, தவறுதலாக கொழும்பு நகர அலுவலகத்திலுள்ள சேகரிப்பு கட்டுப்பாட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே கடன்பட்டோர் மீதி ஒத்த தொகையால் குறைத்து கூறப்பட்டுள்ளது. | 2021 இன் நிதிக்கூற்றுக்களில் மீதி திருத்தப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (∴) 2021 சனவரி 01 முதல் 2021 சனவரி 15 வரையிலான காலத்திற்குரிய வருவாயை மீளாய்வாண்டின் வருவாயாக அங்கீகரித்தமையால் சில்லறைக் கடன்பட்டோர் மீதி ரூபா 585.69 மில்லியன் தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. எனவே ஆண்டிற்கான வருவாயும் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | பட்டியல் பொழிப்புக்கான காலப் பகுதிக்கும் காலண்டர் மாதத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக மேற்குறித்த மீதி உருவாகியுள்ளது. இருப்பினும், பட்டியல் பொழிப்பின் காலப்பகுதியை காலண்டர் மாதத்திற்கு இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய மீதி 2021 ஆம் ஆண்டிலிருந்து உருவாக மாட்டாது. | காலத்திற்குரிய பட்டியல் பொழி ப்பை கலண்டர் மாதத்துடன் இணக் குவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (க) உரிமை கோரக்கூடிய காலம் முடிவடைந்துள்ள ரூபா 1.57 பில்லியன் பொருளாதார சேவை கட்டணம் (ESC) வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, அதே அளவு தொகையால் நட்டம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. | பெறவேண்டிய ரூபா 1,573,231,409 ஈஎஸ்சி ஆனது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதவிழிக்கப்பட்ட வேண்டிய ஏற்கனவே காலாவதியான (மூன்று வருட காலத்திற்கு மேல்) தொகையைக் குறிக்கின்றது. இதனை பதிவழிப்பதற்குத் தேவையான சபை பத்திரங்கள், அங்கீகாரத்திற்காக 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இந்த ஈஎஸ்சி நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாமல், மின்வலு அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவிப்பதன் மூலம் இந்த நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்வதற்கான மாற்றுவழிகளை நிச்சயிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பரிந்துரை செய்துள்ளது.<br><br>இது 2018 இன் தேசிய பாதீட்டு பிரேரணைகளின் ஒரு பகுதியாக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி நிவாரணத்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச்சின் | குறித்த விடயத்தை தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஊடாக பொது திறைசேரிக்கு மீண்டும் அறிவிக்கப்பட்டது. | |
| (கா) அசாதாரண செலவு மீதித் தொகையை எதிரீடு செய்தமையால், விநியோகப் பிரிவிலுள்ள நடைபெறும் வேலை ரூபா 52.06 மில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | ரூபா 26,014,986 தொகைக்கான அசாதாரண செலவு மீதிகளிற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட்டு 2021 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் மற்றும் லைட்டிங் ஸ்ரீலங்கா இரத்னபுரி செயற்திட்டம் தொடர்பான வேலைகளை மீளாய்வு செய்து ரூபா 26,045,997 தொகை தனிப்பட்ட வேலை அடிப்படையில் தீர்க்கப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (கி) சம்பந்தப்பட்ட செலவுகளுக்கு மாற்றப்படாமல், ரூபா 912.69 மில்லியன் தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதே தொகையால் நட்டம் குறைத்து கூறப்பட்டுள்ளது. மேலும், அசாதாரண செலவு மீதியான ரூபா 245.53 மில்லியன் தொகை அகற்றப்படாது வழிச்சரக்குக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | மீதியை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (கீ) நிதிக்கூற்றுக்களிலிருந்து 12 வாகனங்கள் விடுபட்டிருந்தமையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | வாகனங்களை கண்டறிந்து உரிய முறையில் நிலையான சொத்துக்களில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை நிலையான சொத் துக்கள் பதிவேட் டில் பதிவு செய்வ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய பூரணப்படுத்தப்படாத சொத்துகளின் செலவுகளை மூலதனமாக்கியமையால், மின்வலு நிலையத்தின் பெறுமதி ரூபா 175.10 மில்லியனால் அதிகரித்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த பூரணப்படுத்தப்படாத சொத்துடன் தொடர்புடைய ரூபா 323.28 மில்லியன் மூலதனச் செலவு தொகை மற்றும் ரூபா 27.04 மில்லியன் தேய்மானத் தொகை என்பன மீளாய்வாண்டில் வருமான கூற்றுக்கு தாக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆண்டிற்கான நட்டம் ரூபா 350.32 மில்லியன் தொகையால் அதிகரித்தும் நடைபெறும் வேலைகள் கணக்கு மீதி ரூபா 498.38 மில்லியன் தொகையால் குறைத்தும் கூறப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பூரணப்படுத்திய சொத்துக்களுடன் தொடர்புடைய ரூபா 54.14 மில்லியன் தேய்மானத் தொகை மீளாய்வாண்டில் பிறப்பாக்கப் பிரிவில் செலவுகளாக அங்கீகரிக் கப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் நட்டம் அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வாறான வழுக் கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கெ) ஒரு ஆண்டிற்கும் மேலாக வைத்திருக்கப் பட்டுள்ள ரூபா 690,183 தொகையான மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 486 இலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கே) 2015 ஆம் ஆண்டு முதல் முடிக்கப்படாதுள்ள ரூபா 167.25 மில்லியன் மதிப்புள்ள இரண்டு செயற்திட்டங்கள் அகற்றப்படாமல் நடைமுறை வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. . | தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு செயற்திட்டங்களினதும் நடைபெறும் வேலைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறித்த செயற்திட்ட ங்களின் முடிவுறா வேலை மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (கொ) 2019 ஆம் ஆண்டிற்கான கராப்பிட்டிய வைத்தியசாலையின் மின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,568,183 இனை 2020 ஆம் ஆண்டின் தொழிலாளர் செலவின மாக G.D வருமானத்திற்கு சபை சாட்டியுள்ளது. எனவே, மீளாய்வாண்டி ற்கான G.D வருமானம் அத்தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. மின் பராமரிப்பு பணிகளுக்கு எதிராக கிடைத்திருந்த வருமானம் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1 இற்கு முரணாக காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. விநியோக பிரிவு 4 இல் 2020 ஆம் ஆண்டிற்கான மேற்படி வேலைகளுடன் தொடர்புடைய வருமானம் மற்றும் செலவுகளுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்காததால், நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படும் தாக்கத்தை கணக்கிட முடியாதுள்ளது. | கவனத்திற் கொள்ளப்பட்டதுடன், உரிய கணக்கீட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவ்வாறான கொடு க்கல் வாங்கல் களை பதிவதற்கு உரிய கணக்கீட்டு நடைமுறை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (கோ) அனல் மின் கொள்வனவு அட்டுறுக்கள் தொடர்பில் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 0.99 பில்லியன் தொகையால் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய பட்டியல் பெறுமதி ரூபா 72.63 பில்லியன் ஆகும். (2020 இற்காக சான்றுறுதிப்படுத்திய வேலைத் தாளை பார்க்கவும்). ரூபா 75.7 பில்லியன் பேரேட்டு மீதி பின்வருவனவற்றை கொண்டுள்ளது.<br><br>சான்றுறுதிப்படுத்திய பட்டியல்கள் — 74,623,248,756.56<br>2019 இற்கான மேலதிக அட்டுறுக்கள் 2020 இல் திருத்தியமை — (2,937,738,548.88)<br>2020 இற்கான மேல திக அட்டுறுக்கள் — 3,921,791,769.36<br>நாணயக் கடித கட்டணம், பெ.சே.வரி மற்றும் தரகு — 161,187,879.76 | கணக்கீட்டுக் கால த்துடன் தொடர்பு டைய அட்டுறுக் களை இனங்காண் பதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 75,768,489,856.80<br><br>இ.ரூபா 0.9 மில்லியன் பொருண்மையான வேவறுபாடானது 2020 மற்றும் 2019 இற்கான மேலதிக அட்டுறுக்களின் வித்தியாசமாகும்.<br>எவ்வாறாயினும், அட்டுறுச் செலவுக் கணக்கில் மேலதிகம் / குறைவைத் தவிர்ப்பதற்காக, சான்றளிக்கப்பட்ட விலைப்பட்டியல்களை சரியான நேரத்தில் பெறுவதற்கும் மாதாந்தக் கணக்குகளில் கணக்கு வைப்பதற்கும் 2021 ஜனவரி முதல் ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| (ச) 77.2 Gwh புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு விடுபட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 1.1 பில்லியன் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.<br><br>(சா) 2019 ஆம் ஆண்டில் ரூபா 212 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 12.2 Gwh புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 2020 ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்வனவு கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான பொறியாளரால் தயாரிக்கப்பட்ட ‘மாதாந்த என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கை’ ஆகியவற்றைப் பயன்படுத்தி மாதாந்த என்சிஆர்இ அட்டுறுக்கள் மேற்கொள்ளப் படுகின்றது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆலைகளில் இருந்து பொதுவாக விலைப்பட்டியல் தாமதத்துடன் பெறப்படுவதுடன் மற்றும் சில நேரங்களில் தற்போதைய ஆலைகள் கூட பல்வேறு காரணங்களால் கணிசமான தாமதத்துடன் தங்கள் விலைப்பட்டியலை சமர்ப்பிக் கின்றன. எனவே, தகவல் பெறப்பட்ட காலத்தில் கிடைத்துள்ள விலைப் பட்டியல்கள் மாமதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த கொள்வனவு கள் 2021 சனவரி மாதத்திற்கான “என்சிஆர்இ மின்பிறப்பாக்க அறிக்கையில்“ சேர்க்கப்பட்டுள்ளமையால் இந்த தாமதமான விலைப்பட்டியல்களில் சில 2021 சனவரி மாதத்தில் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன. | கணக்கீட்டுக் காலத்துடன் தொடர்புடைய அனைத்து எரிசக்தி கொள்வனவுகளையும் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (சி) 15 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்காக செலுத்த வேண்டிய ரூபா 808 மில்லியன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆதலால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | SPPAs மொத்த ஆரம்ப காலஎல்லை காலாவதியான மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகளின் புதுப்பித்தலானது பல்வேறு காரணங்களால் உடன்படிக்கை காலாவ தியான உடனேயே மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், கையொப்பமிடப்பட்ட உடன்படிக் கைகளைப் பொருட்படுத்தாமல் இந்த மின்வலு நிலையங்கள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. எனவே, தொடர்புடைய உடன்படிக்கைகளின் கால நீடிப்பில் கையொப்பமிடுவதற்கு உட்பட்டு அட்டுறு விலைப்பட்டியல்கள் அவை கிடைக்கும் போது பெறப்பட்டன. எனவே, 2021 சனவரி மாதத்திற்கான கணக்கு | கணக்கீட்டுக் காலத்துடன் தொடர்புடைய அனைத்து எரிசக்தி கொள்வனவுகளையும் இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | களில் 2020 இற்கான இட்டுறுக்களின் கீழ் மொத்தம் ரூபா 900 மில்லியன் அட்டுறுக்கள் காணப்படுகின்றன. | |
| (சீ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தாமதக் கொடுப்பனவு வட்டி ரூபா 2,481 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டிற்கான சான்றுறுதிப்படுத்திய தாமதக் கொடுப்பனவு வட்டிக் கணிப்பீடுகளின் படி அத்தொகை ரூபா 2,885 மில்லியன் ஆகும். ஆகையால், ஆண்டிற்கான நட்டம் ரூபா 404 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான சான்றளிக்கப்பட்ட தாமதமான வட்டியின் பெறுமதி இ.ரூபா 2,885 மில்லியன் ஆனதுடன் (வேலைத் தாளைப் பார்க்கவும்) 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய இ.ரூபா 383 மில்லியன் மேலதிக அட்டுறுத் தொகை காணப்படவில்லை மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான இ.ரூபா 21 மில்லியன் குறைவான அட்டுறுத் தொகை 2020 ஆம் ஆண்டு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>இருப்பினும், செலவுக் கணக்கில் மேலதிக /குறைவான அட்டுறுக்கள் உருவாவ தைத் தவிர்ப்பதற்காக, விலைப்பட்டிய லிலுள்ள சான்றளிக்கப்பட்ட பெறுமதி களைப் பயன்படுத்தி தாமதமான வட்டியை கணக்கிடுவதற்கான ஏற்பாடுகள் 2021 சனவரி முதல் எடுக்கப்பட்டுள்ளன. | கணக்கீட்டுக் கால த்துடன் தொடர்பு டைய தாமதக் கொடுப்பனவு வட்டியை இனங்கா ண்பதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (சு) | கைதவிர்க்கப்பட்ட ரூபா 14 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் பரிமாற்றப் பிரிவின் நிலையான சொத்துக்களில் தற்போதும் காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை சரியான தகவலுடன் நாளதுவரையாக்கும் பொருட்டு பரிமாற்றப் பிரிவின் அனைத்து கிளைகளையும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரைப் படுத்த வேண்டும். |
| (சூ) | இரண்டு தரப்பினர்களினாலும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை இல்லாமை காரணமாக 2020 மார்ச் மாதத்தில் உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து கிடைத்த ரூபா 2 பில்லியன் கடன் தொகையின் காணப்படும் தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. ஆகையால், கடன் மீளளித்தல் தொடர்பில் நிதி நிலைமைக் கூற்றுக்கான தாக்கத்தை அளவிட முடியவில்லை. | இ.மி.ச. இன் பாதகமான நிதி நிலைமை மற்றும் 2020.02.25 ஆந் திகதிய சபை தீர்மானம் இல. 20.03.060 இன் படி தேசத்திற்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்குவதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இ.மி.ச. இன் தொழிற்படு மூலதன தேவையை முகாமைத்துவம் செய்வதற்காக லெகோ இடமிருந்து இந்த கடன் வசதி பெறப்பட்டது. கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இரு தரப்பினரும் வரைவு கடன் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து வருகின்றனர். | உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு துரிதமாக நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (செ) | 2007 ஆம் ஆண்டு முதல் மிகை அறவீடு நிறுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்கு இல. 3670100474 இல் காணப்படுகின்ற நிலுவைத் தொகை தொடர்பாக சபை ரூபா 6.54 மில்லியனைத் தவறுதலாக மிகை அறவீடாக சாட்டியிருந்தது. எனவே நிறுத்திவைக்கப்பட்ட வருவாய் அதே தொகையால் அதிகமாகக் கூறப்பட்டி ருந்தது. | இந்த நிலுவையில் உள்ள மிகை அறவீட்டுக் கட்டணம் ரூபா 6,540,244 என்பது நீதிமன்ற வழக்கு இல. 43932/MR (மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு) இற்கு உரித்தானதாகும். நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரை இந்த நிலுவையை தனியாக வைத்திருக்க இ.மி.ச. இன் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. | குறித்த விடயத்தை திருத்துவதற்கு நட வடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (சே) நிலக்கரி கப்பலேற்றல் கட்டணத்திற்கான ரூபா 63.56 மில்லியன் ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. ஆகையால், ஆண்டிற்கான நட்டம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் லெகோ உடன் கலந்துரையாடப்பட்டு வரப்படுகின்றமையால், 2020.12.31 வரை மேற்கொள்ளப்பட்டரூபா 63.56 மில்லியன் தொகை இ.மி.ச. இன் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கிணக்கம், 2020 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மூடப்பட்ட பின்னர், 2021.03.22 இல் ரூபா 22,520,185.72 மட்டுமே தீர்க்கப்பட்டமையை போதியளவில் வெளிப்படுத்துகின்றது. | கணக்கீட்டுக் கால த்துடன் தொர்ர்பு டைய அட்டுறுக் களை இனங்காண் பதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (சொ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்து உண்மையாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களி லிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. இருப்பினும், சபையால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காரணமாக இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மீளமைக்கப்பட்டு வரப்படுகின்றது. | இ.மி.ச. இலுள்ள செயல்பாட்டின் சிக்கலான தன்மை மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அளவு காரணமாக நிதிக் கூற்றுக்கள் மீளமைக்கப்பட்டு வரப்படு கின்றன. இருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மீளமைப்பதைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் மீளமைக்கப் படுவதை தவிர்ப்பதற்காக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் |
| (சோ) ரூபா 557.94 மில்லியன் வரவு மீதியொன்றும் ரூபா 556.81 மில்லியன் செலவு மீதியொன்றும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதியாக 2002 இலிருந்து அகற்றப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது. | விநியோகப் பிரிவுகளின் பரவலாக்கம் நடைபெற்ற 2002 ஆம் ஆண்டு முதல் மேற்படி மீதி முன் கொண்டுவரப் படுகின்றது. ஆதாரப்படுத்தும் ஆவணங்களைக் கண்டறிந்து அதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| (ட) ஒரு வாடிக்கையாளரிடமிருந்து கிடைத்த ரூபா 2.08 மில்லியன் தவறுதலாக வேறொரு வாடிக்கையாளர் கணக்கில் பதியப்பட்டுள்ளது. | இத்தவறு 2021 இன் நிதிக் கூற்றுக்களில் ஏற்கனவே திருத்தப்பட்டுள்ளது. | வாடிக்கையாளர் பெறுவனவுகளை பதிவுசெய்கின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை பலப்படுத்துதல். |
| (டா) கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணமான ரூபா 1.25 மில்லியன் தொகையொன்று வருமனக் கூற்றிற்கு சாட்டுவதற்குப் பதிலாக கடன் மீதிக்கு சாட்டப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நட்டமும் கடன் மீதியும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து பெறப்பட்ட ஐந்து பில்லியன் கடன் வசதி, வழங்கப்பட்ட தொகையை மட்டும் கருத்தில் கொண்டு, செயலாக்கக் கட்டணத்தைக் கழித்த பின்னர் 2020.12.31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,998,750,000 ஆகப் பதிவு செய்யப்பட்டது. 2021 இன் ஏப்ரல் | கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்கின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமை யினை பலப்படுத்துதல். |

| | | |
|---|---|---|
| | மாதத்திற்கான கணக்குகளில் இது திருத்தப்படும். | |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டு த்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 753.61 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த விடயம் 2013 முதல் தொடர்ச்சியாக கடந்தகால கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட இச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. | மேற்குறிப்பிட்ட மீதி இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாக காட்டப்படாததுடன், இது குறித்து பெறோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், பெறோலியக் கூட்டுத்தாபனம் தனது நிதிக் கூற்றுக்களில் இ.மி.ச. இடமிருந்து பெறப்படும் வட்டி என இதனைக் காட்டியிருந்த போதிலும் அதனை இ.மி.ச. ஒப்புக்கொள்ளவில்லை. இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக பெறோலியக் கூட்டுத்தாபனம், இ.மி.ச. திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கு மின்வலு அமைச்சில் நடந்த கணக்காய்வுக் குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. | தொடர்புடைய தரப்பி னருடன் கலந்தாலோ சித்து இந்த விடயத்தை தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| (ஆ) விலைப்பட்டியலிடல் முறைமை யிலும் அதே போல் நிதிக்கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 01, 02, 03 மற்றும் 04 இன் விலைப் பட்டியலிடல் முறைமையில் காட்டப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 41.18 மில்லியன் கூட்டுமொத்தமான கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423.76 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோர் கணக்கிணக்கங்கள் அனைத்து விநியோகப் பிரிவுகளாலும் தயாரிக்கப்பட்டு, பிரிவுகளின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் தேவையான நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| (இ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 2,343 மில்லியன் மற்றும் ரூபா 149 மில்லியன் வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான கணக்கிணக்கம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை 2021 இன் நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அந்தந்த பிரிவுகளின் பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) ரூபா 117.58 மில்லியன் தொங்கல் மீதியின் தன்மையினை இனங் காண்பதற்காக அந்த மீதியுடன் தொடர்புடைய வயது பகுப்பாய்வு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபாரக் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் கணனி முறைமை மூலம் உருவாக்கப்படுகின்றன. இருப்பினும், தற்போதைய முறைமை தொங்கல் மீதிகளிற்கான காலப் பகுப்பாய்வு வசதியை வழங்குவதில்லை. எனவே, விநியோக பிரிவு 2 மற்றும் 4 ஆகியவை வயது பகுப்பாய்வை கைமுறையாகத் தயாரிப்பதுடன் இது ஒரு சிக்கலான செயல்முறையாகும். எனவே, எதிர்காலத்தில் தொங்கல் மீதிக்கான காலப் பகுப்பாய்வை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதிகளிற்காக காலப் பகுப்பாய்வொன்றை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (உ) சபையால் வாடிக்கையாள ருக்கான தவறான கட்டண முறைப் பிரயோகம் காரணமாக ரூபா 38.76 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்படுகின்றது. | தற்போது செயன்முறையிலுள்ள இவ்விடயத்தை தீர்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | குறித்த விடயத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள செலுத்தவேண்டிய அனல்மின் - சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுடன் தொடர்பு டைய மீதிக்கும் தீர்க்கப்படாத சான்றுபடுத்திய பட்டியல்களின் மீதிகளிற்கும் இடையே ரூபா 5.6 பில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | L5806- ‘செலுத்த வேண்டிய அனல்மின்- சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் கணக்கு 2020 இல் L-5920‘ அட்டுறு ’கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும். சுயாதீன மின் உற்பத்தியாளர்களின் அனல் மின் நிலையங்களில் இருந்து ஒவ்வொரு மாதமும் பெறப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதிகளைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட அட்டுறு மீதியை இந்த மீதி காட்டுகின்றது. பணம் செலுத்துவதற்கான சான்றளிப்பின் போது இந்த மீதிகள் சீராக்கப்படுகின்றன. இந்த பதிவு செய்யப்பட்ட மேலதிக / பற்றாக்குறை அட்டுறு மீதியானது கொடுப்பனவின் போது மீளமைக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பேரேட்டு மீதிக்கும் சான்றளிக்கப்பட்ட நிலுவையிலுள்ள மொத்த விலைப்பட்டியல் தொகைக்கும் இடையே இ.ரூபா 5.6 பில்லியன் | சரியான செலுத்த வேண்டிய மீதியை பதிவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| | (பணித்தாளை பார்க்கவும்) வேறுபாடு உள்ளது.<br><br>இருப்பினும், 2021 சனவரி முதல், விலைப்பட்டியலுக்கு விரைவாக சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, முன்னெடுத்துச் செல்கின்ற இரு மீதிகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருக்காது. | |
| (எ) நிதிக்கூற்றுக்களிற்கும் இ.மி.ச. தகவல் அமைப்பால் பராமரிக்கப்படும் பதிவுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளுக்கும் இடையே சூரிய சக்தி கொள்வனவு தொடர்பாக ரூபா 20.7 மில்லியன் தேறிய கணக்கு வேறுபாடு அவதானிக்கப்பட்டது.<br><br>(ஏ) நிதிக்கூற்றுக்களிற்கும் இ.மி.ச. தகவல் அமைப்பால் பராமரிக்கப்படும் பதிவுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளுக்கும் இடையே சூரிய சக்தி கொள்வனவு தொடர்பாக ரூபா 100 மில்லியன் தேறிய நேர்பெறுமதி வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பட்டியல் பொழிப்புக்களில் இருந்து கிடைக்கும் தகவலின் அடிப்படையில் தேறிய கணக்கு மற்றும் தேறிய நேர்பெறுமதி செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அதன்படி, மாகாணத்தின் கணக்காளர் (வருவாய்), எரிசக்தியை கொள்வனவு செய்வது பரிமாற்றப் பிரிவின் பொறுப்பாக இருப்பதால், அந்தந்த செலவினங்களை பரிமாற்றப் பிரிவுக்கு மாற்றுகிறார். கணக்காய்வாளர்களால் குறிப்பிடப்படும் PUCSL அறிக்கையானது மாகாண தரவுகள் கிடைக்காத இ.மி.ச. இன் ஒட்டுமொத்த தகவலை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட அறிக்கையாகும். எனவே, குறிப்பிடப்பட்ட அறிக்கையில் வழங்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மையை மெய்மையாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த அறிக்கையில் தரப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மையை பரிசோதிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல். |

## 1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்ப ட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.ச. இன் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,544.4 மில்லியன் மற்றும் ரூபா 1,712 மில்லியன் கூட்டுமொத்தமான அத்தகைய படிகள் | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்<br><br>பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு<br><br>அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் | பதவியணியினருக்கு படிகளைச் செலுத்து கையில் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. | |
| (ஆ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்கு வதற்குப் பதிலாக இ.மி.ச. 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங் கியிருந்தது. மேலும், இ.மி.ச. பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்<br><br>பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு<br><br>அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்று வதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. | பதவியணியினருக்கு கடன்களைச் செலுத்து கையில் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் விலகல் காணப்படுமாயின் அதற்கு பொது முயற்சி கள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.மி.ச. நுகர்வோர் வைப்புக்களிற்கான வட்டியை செலுத்தியிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலைவீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,613 மில்லியனாக இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 6,731.90 மில்லியனாக இருந்தது. | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(1)(ஈ), 4(1)(இ) மற்றும் 30 ஆம் பிரிவுகளின் பிரகாரம், மின்சார கட்டணங்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) ஆல் ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், தற்போதைய மின்சார கட்டணமானது 2013 இல் வழங்கப்பட்டதுடன் 2014 இல் சீராக்கப்பட்டதாகும். இது இ.மி.ச. இன் வணிகத்தை மேற்கொள்வதற்காக போதியளவு காசினை உருவாக்குவதில்லை. சட்டத்திலுள்ள தொடர்புடைய விதிகள் வருமாறு;<br><br>3(1) இலங்கையிலுள்ள மின்சாரத் தொழிலிற்கான சிக்கன, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பிரமாணங்கள் என்ற வகையில் செயற்படுதல் ஆணைக்குவின் தொழிற்ப ாடாகுமென்பதுடன், | சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

(ஈ) - பாவனையாளர்களிற்கு சாத்தியமான உச்ச சிக்கன மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அனுமதிப் பத்திரதாரர்கள் மற்றும் ஏனைய மின்சார பொறுப்பாளர்களால் விதிக்கப்படுகின்ற தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை ஒழுங்கமைத்தல்.

30(1) இப்பிரிவினை பின்வருவனவற்றிற்கு பிரயோகித்தல் வேண்டும்.

(அ) மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விற்பனைக்காக பரிமாற்றல் அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகள் என அழைக்கப்படும்); மற்றும்

(ஆ) மின்சார விநியோகம் மற்றும் வழங்களிற்காக விநியோக அனுமதிப்பத்திர தாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகள்” என அழைக்கப்படும்); மற்றும்

(2) சூழ்நிலைக்கேற்ப பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகளும் விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகளும் தொடர்புடைய அனுமதிப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(அ) அது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை வெளிக்காட்டும் முறைக்கு அமைவாக குறித்த அனுமதிப்பத்திரதாரர்களால் ஏற்படுத்தப்பட்டதாக:

(ஆ) வினைத்திறனான அடிப்படை யொன்றின் மீது அதற்குரிய அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்கையில் உறப்பட்ட நியாயமான அனைத்துக் கிரயங்களையும் அறவிடுவதற்கு தொடர்புடைய அனுமதிப்பத்திரதாரரை அனுமதிப்பதாக:

(இ) பிரிவு 5 இன் கீழ் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை வழிகாட்டலிற்கு அமைவாக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டவையாக காணப்படுகின்ற: மற்றும்

(ஈ) பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக சபையால் தேவைப்படுத்தப்பட்டவாறு உரிய முறையில் வெளியிடப்பட்டும், இருத்தல் வேண்டும்.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விநியோக அனுமதிப்பத்திரதாரரும் (DL) அவற்றினது பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புக்களிற்காக வட்டியினை செலுத்துதல் வேண்டும். அதிகாரச் சட்டத்தில் இக்கூற்று பின்வருமாறு காணப்படுகின்றது.

*பிரிவு 28(3) – "இந்தப் பிரிவிற்கு அமைவாக பிணைப்பணம் என்ற வகையில் விநியோக அனுமதிப்பத்திர தாரருக்கு வழங்கப்பட்டு அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படும் எந்தவொரு பணத் தொகையுமாகும். ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அனுமதிப்பத்திர தாரரால் அவ்வப்போது திர்மானிக்கப்படுகின்ற அவ்வாறான வீதமொன்றில் அந்த பிணைப்பணம் மீது அனுமதிப்பத்திர தாரரின் கைவசம் வைத்திருக்கப்படுகின்ற அவ்வாறான காலப்பகுதிக்கு வட்டியினை செலுத்துதல் வேண்டும்".*

தற்போது இ.மி.ச. அதனது வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு போதியளவு பணத்தை சேகாரக்காமையின் விளைவாக அதனது பாவனையாளர்களின் பிணைவைப்புக்களை தொழிற்படு மூலதனத் தேவையின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதுடன எஞ்சிய தொழிற்படு மூலதனத் தேவையினை மேலதிகப்பற்றுக்கள், குறுங்காலக் கடன்கள் என்ற வகையில் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

இ.மி.ச. இனால் அதனது தொழிற்படு மூலதனத்தின் ஒரு பகுதியாக அதனது பாவனையாளர்களின் பிணை வைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம், வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினைச் சேமித்து அதனது பாவனையாளர்களிற்குப் பகிரப்படுகின்றமையால் கட்டணத்தை குறைக்கக்கூடியதாக உள்ளது. இந்த பிரிவின் பிரகாரம் பிணை வைப்புக்கள் மீது DL வட்டியினை செலுத்தியிருப்பின்

| | | |
|---|---|---|
| | அது DL இற்கான நிதிச் சுமையாக சேர்ந்து தொழிலிற்கு மேலதிகக் கிரயத்தை தோற்றுவித்திருக்கும்.<br><br>ஆகையால், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்துள்ளோம். மேலும், பிசிஎஸ்இஎல்ஆர் ஆணைக்குழு (சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை எளிமைப்படுத்தல் ஜனாதிபதி ஆணைக்குழு) இன் செயலாளருக்கான பிரதியுடன் மின்வலு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இ.மி.ச. இன் டிஜிஎம்(சிஎஸ் மற்றும் ஆர்ஏ) /ஜிஇஎன்/1 ஆம் இலக்க 2021-05-28 ஆந் திகதிய கடிதத்தின் மூலம், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குமாறு இ.மி.ச. கோரியுள்ளது. | |

### 1.5.6 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.<br><br>**(அ) லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடட்** | | |
| (i) வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின்படி, 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான பொருளாதார சேவை கட்டணம் (ESC) தொடர்பான ரூபா 159,549,619 மதிப்பீடு மற்றும் ரூபா 75,461,644 அபராதம் குறித்த எந்த தகவலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், முறையாகத் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம் இல. 13 இன் பிரிவு 6 இன் படி, ESC பொறுப்பு காலாண்டு முடிவடைந்த அடுத்த மாதத்தின் இருபதாம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தப்பட | ESC இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இது தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்படும் வரை ESC இன் தீர்ப்பனவு தொடர்பில் கம்பனிக்கு எதிராக எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையையும் அல்லது எந்தவொரு வரியையும் விதிக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது. | தண்டப் பணத்தை தவிர்ப்பதற்காக உரிய திகதிக்கு முன்னர் பொறுப்புக்களை தீர்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டும். எவ்வாறா யினும், நிறுவனம் இந்த அறிக்கையின் திகதி வரை செலுத்த வேண்டிய மொத்த ESC தொகையான ரூபா 579,179,232 ஐ செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ii) இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 12,073,788 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,559,819 வரவு மீதியினைக் கொண்ட தொங்கல் கணக்கில் வைத்திருக்கப் பட்டுள்ளதுடன் 2020.01.01 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூபா 4,674,041 ஆகும். மீளாய்வாண்டில், எந்த காரணமும் இல்லாமல் கம்பனி ரூபா 1,594,325 தொகையை மேற்படி தொங்கல் கணக்கில் வரவிலும் ரூபா 3,708,547 தொகையை செலவிலும் பதிந்திருந்தது. | உள்ளகக் கண்காய்வு அறிக்கைளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த வழுக்களைத் திருத்துவதற்காக மேற்படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. | தொங்கல் கணக்கிலுள்ள மீதிகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனையான சீராக்கமாக உண்மையில் ஏற்பட்டிருக்காத 10 சதவீத வரி எல்லை சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி ரூபா 3,653,155,934 என்ற 10 சதவீத இலாப எல்லையினை வருவாயில் சேர்த்துள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இ.மி.ச. இற்கு வற் விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது. இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சிசி இன் பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்களுக்கான பெறுமதியை விட குறைவாக இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் படியே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல், இ.மி.ச. இந்த உத்தரவை சவால் செய்து, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நாங்கள் விலைப்பட்டியலில் 10% சுங்க தீர்வையைச் சேர்த்துள்ளோம். ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கப்பட்டுள்ள மையால் மேலதிக வெளியீட்டு வற் தொகை அனுப்பப்படவில்லை. எனவே வருமானம் அதிகரித்துக் கூறப்பட்டமைக்கு இதுவே காரணமாகும். | இலங்கை கணக்கீ ட்டு நியமத்தின் தேவைப் பாடுகளின் படி பதிவே டுகளை பராமரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) 2020.12.31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரூபா 10,624,394 பெறவேண்டிய முகாமைத்துவக் கட்டணத்தின் ஐயப்பாட்டிற்காக கம்பனி எந்தவொரு ஏற்பாட்டையும் செய்திருக்கவில்லை. | எல்சிசி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மாணம் எடுக்கப்பட்ட பின்னர் இந்த விடயம் நிவர்த்தி செய்யப்படும். | பெறவேண்டிய முகாமைத்துவக் கட்டணத்தின் அறவீட்டுச் சாத்தியத்தை மீளாய்ந்து நட்டக்கழிவுக்கு பொருத்தமான ஏற்பாட்டை செய்தல் வேண்டும். |
| (v) 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதியை அறிவிக்காதது குறித்து ரூபா 205,000,000 தொகையை கம்பனி இலங்கை சுங்கத்திற்கு தண்டமாக செலுத்தியிருந்தது. 2019 இல் கம்பனி செலுத்திய தண்டத் தொகையினை குறித்த ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக இலங்கை சுங்கத்தின் வற் கணக்கிற்கும், வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் மற்றும் சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் முறையே ரூபா 158,186,165, ரூபா 39,970,418 மற்றும் ரூபா 6,843,417 என தவறுதலாக வரவு வைத்திருந்தது. அதன் விளைவாக, நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 205,000,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட் டிருந்ததுடன், சொத்துக்கள் ரூபா 198,156,583 ஆல் அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 6,843,417 ஆல் குறைத்தும் பதியப்பட்டிரு ந்தன.<br><br>இலங்கை மின்சார சபையிடமிருந்து (இ.மி.ச.) பெறப்பட்ட நிதியை ஏற்றுமதிக் கட்டணங்களைத் தீர்ப்பதற்காக கம்பனி பயன்படுத்தியிருந்தது. மேற்படி அபராதத் தொகையான ரூபா 205,000,000 இனைச் சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலேயே செலுத்தியதுடன், இந்த இழப்புக்கு காரணமானவர் களை அடையாளம் காண முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை.<br>அக்காலத்தில் அனைத்து சுங்க விடயங்களையும் சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் (சி.எஸ்.சி) கையாண்டிருந்ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்படி தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பின்னர் இறுதி வற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர்.<br><br>எல்சிசி ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஏற்றுமதிகளுக்காக ரூபா 37,594,744 தொகையான வற் இனை செலுத்தியுள்ளதுடன் நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்கு சுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி ரூபா 205 மில்லியன் தொகையினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டிருந்தது. | இந்த நட்டத்திற்குப் பொறுப்பான ஆட்களை கண்டறிவதற்கு முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். |
| (vi) தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடட் (TISCL) இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539,192,079 தொகையினை இணங் கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL) ஊடாக | தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடனை ஐயக்கடன் என்று குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் | நீண்டகால நிலுவை மீதிகளின் அறவீட்டுச் செயல்பாட்டை துரிதப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு கம்பனி தவறியிருந்தது. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் மேற்படி மீதியினை 2020.12..31 இல் உள்ளவாறான அதன் நிதிக் கூற்றுக்களில் பதிந்திருக்கவில்லை. TISCL/CECL இந்த மீதியினை உறுதிப் படுத்தியிருக்காததுடன், நட்டக் கடனிற்கான எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை. ஆகையால், மேற்படி மீதியின் சரியான தன்மை மற்றும் காணப்படு தன்மையினை கண்டறிய முடிந்திருக்கவில்லை. | உள்ள தகவல்களின்படி, அமைச்சரவையால் தீர்மானிப்பதற்காக தீர்வுத் திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் இடமிருந்து (தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனி லிமிடெட்) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தூரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக திறைசேரி (தலைவர்), சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதுடன் அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. | |
| (vii) இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 578,678,686 தொகையான ஈ.எஸ்.சி மற்றும் ரூபா 18,075,801 சில்லறைக் கடன்பட்டோர், நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987 மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் - நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் ரூபா 85,887,776 தொகை மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் இடமிருந்து பெறப்பட வேண்டிய 50 சதவீத எஸ்ஜிஎஸ் கட்டணமான ரூபா 8,048,531 என்பவற்றை மெய்மை யாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக் காய்விற்கு கிடைக்கப்பெறவி ல்லை. | i. இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ESC: ரூபா 578,678,686<br><br>ESC இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.<br><br>ii. சில்லறைக் கடன்பட்டோர் ரூபா 18,075,802<br><br>அறவிட முடியாத NBT மற்றும் PAL இன் தொகை ரூபா 17,839,949 ஆகுமென ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்தது. ஆதாரம்/ தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.<br><br>iii. நோபல் வளங்களிலிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987<br><br>நோபல் வளங்களுக்காக ரூபா 85,887,776 செலவு மீதி காணப்படுவதுடன் அதற்கு எதிராக இந்த கடன்பட்டோர் மீதியை நாங்கள் எதிரீடு செய்வோம்.<br><br>iv. வியாபார கடன்கொடுத்தோர் நோபல் வளம் ரூபா 85,887,776<br><br>நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் காலாவதியானதன் காரணமாக நோபல் ரெசோர்சஸ் இன்டெல் இன்டர்டிரான் லிமிடெட் இனால் குறைவாகப் பற்றிய மீதியை பிரதானமாக இத்தொகை | குறித்த மீதிகள் தொடர் பில் உரிய ஆவணங்கள் பேணப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொண்டுள்ளது.<br><br>v. லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டில் இருந்து பெறப்பட வேண்டிய 50% SGS கட்டணங்கள்: ரூபா 8,048,531<br><br>2015/16 பருவத்தில் 17 கப்பல்களுக்கான வெளியேற்ற துறைமுகத்தில் விதிக்கப்பட்ட வரைவு கணக்கெடுப்பு கட்டணத்தை இது உள்ளடக்குகின்றது. கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தக் கட்டணத்தைச் செலுத்துமாறு லிபர்ட்டி கமாடிடிஸ் லிமிடெட்டிற்கு ஒரு மின்னஞ்சல் 2019 இல் அனுப்பப்பட்டது. இந்த விவகாரத்தில் நடுவர் செயல்முறை இடம்பெற்று வருகின்றது. | |
| (viii) எதிர்வரும் நிதியாண்டிற்காக இ.மி.ச. ஆல் செலுத்தப்பட்ட ரூபா 285,375,105 கப்பலேற்றல் மற்றும் பெ.சே.வ. கட்டணத்தை வெவ்வேறாக வெளிப்படுத்தாது அத்தொகை, ”அனல் நிலக்கரி கப்பலேற்றலுக்கான வியாபாரக் கடன்பட்டோர் (இ.மி.ச.)” கணக்கி லிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ”அனல் நிலக்கரி கப்பலேற்றலுக்கான வியாபாரக் கடன்பட்டோர் (இ.மி.ச.)” மற்றும் இ.மி.ச. இடமிருந்து பெறப்பட்ட முற்பணம் என்பன ரூபா 285,375,105 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | எல்சிசியின் தற்போதைய கணக்கு வைத்தல் முறைகளின்படி ஒவ்வொரு நிலக்கரி பருவத்திற் குமாக கணக்கீடு மேற்கொள்ளப் படுகின்றது. 2020-21 பருவத்திற்கான தேறிய பெறுமதியே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்து பெற வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.<br><br>கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளபடி, ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய தேறிய மீதி வெளிப்படுத்தப்பட்ட போதிலும், இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய மொத்த தொகை மற்றும் பெறப்பட்ட முன்பணங்கள் தனித்தனியாக வெளிப் படுத்தப்படவில்லை. அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பெறப்பட்ட முற்பணங்களை தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கிடைத்த முற்பணத்தை வெவ்வேறாக வெளிப் படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) நிதிக் கூற்றுக்களில் எந்தப் பொறுப்பும் இல்லாமல் கம்பனி 2019 ஆம் ஆண்டில் சிலோன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (CSCL) ஊடாக மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு ரூபா 4,000,000 தொகையை செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனி இந்தத் தொகையை CSCL இற்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் இருந்து தவறாகக் கழித்திருந்தது. எனவே, பொறுப்புகள் இதே தொகையால் குறைத்து | 2019 ஆம் ஆண்டில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபன லிமிடெட் ஊடாக மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு இந்த பணம் செலுத்தப்பட்டதுடன் மெர்கேட்டர் பொறுப்பின் ஆதாரம்/ தோற்றம் குறித்து ஆராயப்பட்டு, அதற்கமை அதனுடன் தொடர்புடைய பதிவுகளை CSC க்கு அனுப்பி வைக்கப்படும். | மெர்கேட்டர் சிங்கப்பூர் (பிரைவேட்) லிமிடெட் இற்கு செலுத்திய தொகைக்குரிய மூலத்தை/ ஆவணத்தை மதிப்பிடுவதற்கு விசாரணை நடாத்த வேண்டும். |

கூறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (x) நிதிக் கூற்றுக்களின் படி 2020.12.31 இல் உள்ளவாறு இ.மி.ச. இடமிருந்தான இறுதி பெ.சே.வரியும் ஏனைய பெறப்பட வேண்டியவையும் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் என்பன முறையே ரூபா 197,452,711 மற்றும் ரூபா 12,073,788 ஆகும். எனினும், அது இ.மி.ச. ஆல் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, கணக்காய்வுக்கு எந்த வொரு சான்றும் கிடைக்காததால், வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் சரியான தன்மையை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. | இ.மி.ச. இடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 197,452,711 இறுதி பெ.சே.வரியும் ஏனையவைகளும்:<br><br>இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி வெளிப்படுத் தியிருக்கவில்லை. எல்சிசி மற்றும் இ.மி.ச. இன் உத்தியோகத்தர்கள் சுங்க உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதல்களின் படி செலுத்தவேண்டிய பெ.சே.வ. இனை கணிப்பிட்டிருந்ததுடன் 123 மற்றும் 154 கப்பலேற்றல்களிற்காக ரூபா 195,780,909 இனை செலுத்தவேண்டுமென்பதனை கண்டறிந்தனர். அதற்கும் மேலாக, குறித்த கப்பலேற்றல்கள் தொடர்பில் ரூபா 1,671,802 நாணயமாற்று நட்டத்தை செலுத்துமாறு எல்சிசி கேட்கப்பட்டிருந்தது. தற்போது மேற்படி செலுத்த வேண்டிய பெ.சே.வ. எதிர்கால தீர்ப்பனவுக்காக தொடர்ந்து பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றது.<br><br>வியாபாரக் கடன்பட்டோரின் பொழிப்பு (இ.மி.ச.) - நீராவி நிலக்கரி ரூபா 12,073,788 கீழே தரப்பட்டுள்ளது.<br><br>• இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ரூபா 2,563,287: 2017 இல் இ.மி.ச. உடன் கணக்கைத் தீர்த்த பிறகு மீதமுள்ள தொகையாகும். ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.<br><br>• வியாபாரக் கடன்பட்டோரின் (இ.மி.ச.) நீராவி நிலக்கரி ரூபா 7,750,000: இ.மி.ச. சார்பாக மெர்கேட்டர் கம்பனிக்கு செலுத்தப்பட்ட தொகை. ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது.<br><br>• இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை ரூபா 1,760,500: 2017 ல் இ.மி.ச. உடன் கணக்கைத் தீர்த்த பிறகு மீதமுள்ள தொகையாகும். ஆதாரம்/தோற்றம் குறித்து மேலும் ஆராயப்படுகிறது. | குறித்த மீதிகள் தொடர் பில் உரிய ஆவணங்கள் பேணப்படுவதுடன் இ.மி.ச. இடமிருந்து உறுதிப்படு த்தலை கோருதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (xi) கம்பனி கப்பலேற்றல் இல. 123 இற்கான சுங்க பெ.சே.வ. ஆக ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனினும், சுங்கத்தின் படி, உண்மையான பெ.சே.வ. தொகை ரூபா 106,969,404 ஆகும். எனவே, மேலதிகமாகச் செலுத்திய தொகை ரூபா 29,266,965 ஆகும். | மேலதிகமாகச் செலுத்திய ரூபாடி 29,266,965 தொகைக்கான பின்வரும் ஆவணங்கள் இலங்கை சுங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.<br>• 2016.11.09 ஆந் திகதி 1183769 ஆம் இலக்க Mv.Star Lutas தொடர்பான இறுதி சுங்க வெளிப்படுத்துகை (சுங்க பிரகடனம்)<br>• இறுதி VAT கணிப்பீடு<br>• 2021 பெப்ரவரி 10 ஆந் தேதியிட்ட சமீபத்திய சுங்க மீளளித்தல் கடிதத்தின் நகல். | மேலதிகமாகச் செலுத்திய தொகையை அறவிடுவத ற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் (பிரைவட்) லிமிடட்.**<br><br>(i) இருப்புகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 02) இன் 37 ஆம் பந்தியின் படி, ஒரு நிறுவனம் வைத்திருக்கின்ற பல்வேறு இருப்பு வகைகளின் முன்கொண்டு செல்லும் தொகைகள் பற்றிய தகவல்களையும் இந்த சொத்துகளில் ஏற்படும் மாற்றங்களின் அளவையும் நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துகின்ற நபர்களிற்காக வெளிப்படுத்த வேண்டும். இருப்பினும், நிறுவனம் இருப்புக்களின் வெவ்வேறு வகைப்பாடுகளை வெளிப்படுத்தி யிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இருப்புக்களின் பெறுமதி கம்பனியின் மீட்டர் என்க்ளோசர் உற்பத்தியுடன் தொடர்புடையதுடன் இந்த பெறுமதியானது அடிப்படையில் மூலப்பொருட்களின் பெறுமதிகள், நடைபெறும் வேலைகள் மற்றும் மீட்டர் அடைப்புகளின் முடிக்கப்பட்ட தயாரிப்புகளின் பெறுமதிகளை கொண்டுள்ளது. இதனை விரிவாக காண்பிப்தற்காக எதிர்வரும் காலத்தில் சிறந்த நடைமுறை கடைபிடிக்கப்படும். | சட்டத்தின் தேவைப்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) LKAS 12 வருமான வரி நியமத்தின் 80 (அ) பந்தியின் படி நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்பில் வருமான வரி விதிப்பு விவரங்கள் தொடர்பான வருமான வரிச் செலவுகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமான வரி விதிப்பு விவரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் வருமான வரி விதிப்பு விவரங்கள் வெளிப்படுத் தப்பட வேண்டும். |
| (iii) இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) 38 – அருவச் சொத்துக்களின் 118 (அ) மற்றும் (ஆ) பந்திகளின் படி, ஒரு நிறுவனம் குறித்த அருவச் சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலவரையற்றதா அல்லது வரையறுக்கப்பட்டதா என்பதனை யும் வரையறுக்கப்பட்டதாயின், பயனுள்ள வாழ்க்கை காலம் அல்லது வரையறுக்கப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தி ற்கு அருவச் சொத்துக்களுக்கு | எதிர்காலத்தில் இதற்காக சிறந்த நடைமுறை கடைபிடிக்கப்படும். | நியமத்தின் தேவைப்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப் படுகின்ற காலத் தேய்மான வீதம் மற்றும் கணிப்பீட்டு முறை ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், நிறுவனம் நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை முன்வை த்திருக்கவில்லை. | | |
| (iv) நிதிக் கூற்றுக்களிலுள்ள வியாபார மற்றும் பிற பெறத்தக்கவை என்ற குறிப்பு இல. 07 இன் கீழ் நிறுத்திவைக்கப்பட்ட பெறத்தக்க வரி தொகை ரூபா 2,120,524 எனக் காண்பித்திருந்த போதிலும், அதற்கான மூலச் சான்றிதழ்கள் கணக்காய்வு நோக்கத்திற்காக கிடைக்கப்பெறவில்லை. | இதற்காக எதிர்காலத்தில் சிறந்த நடைமுறை கடைபிடிக்கப்படும் | தேவையான ஆவணங் கள் உரிய வேளையில் கணக்காய்விற்கு வழங்கப் படுதல் வேண்டும். |
| (v) நிறுவனம் 2020 அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிற்கான தலைவரின் படிக்காக செலுத்த வேண்டிய ரூபா 187,500 தொகைக்கு ஏற்பாடு செய்திருக்கவில்லை. | தலைவருக்கான மாதாந்த கொடுப்பனவு அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் 2020 இல் செலுத்தப்பட்டதுடன், அது நிர்வாகச் செலவின் கீழ் தவறாகப் பதிவு செய்யப்பட்டதில் பிழை கண்டறியப்பட்டது. பதிவேடுகளை பேணுகையில் இந்த தவறுகளை தவிர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அவ்வாறான வழுக்களை தவிர்ப்பதற்கு தேவை யான நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |
| (vi) பரிமாற்ற ஐடி 1944619, 1944620, 1956018 மற்றும் 1956014 தொடர்பான ரூபா 13,861,600 தொகைக்கு ஆவணச் சான்று கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு கட்டணமும் முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களுடன் தொடர்வதுடன் ஒவ்வொரு கட்டணத் தேதியையும் மதிப்பையும் விரிவாக வழங்க முடிந்தால், இந்த சந்தேகத்தை நிவர்த்திக்க எமக்கு முடியும். | தேவையான ஆவணங் கள் உரிய வேளையில் கணக்காய்விற்கு வழங்கப் படுதல் வேண்டும். |
| (vii) LKAS 8- கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்; இன் படி நிறுவனம் ரூபா 9,573,376 கொள்வனவுக் கிரயமுடைய முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதற்காக சிறந்த நடைமுறை கடைபிடிக்கப்படும். | நியமத்தின் தேவைப்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |
| (viii) நிறுவனம் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,218,582 தொங்கல் கணக்கு மீதியை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக் களில் அங்கீகரித்திருக்கவில்லை. | மீதியை ஆராய்ந்து எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொல்லப்பட்ட விடயத்தை விசாரித்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ix) நிதிக் கூற்றுக்களில் 2017 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 729,992 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் அட்டுறுச் செலவின மாகக் காட்டப்பட்டுள்ளது. | இதை உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த விடயத்தை திருத்து வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) லங்கா மின்சார கம்பனி (பிரைவட்) லிமிடட்**

| | | |
|---|---|---|
| (i) எல்கேஏஎஸ் 1 இன் 32 ஆம் பந்தியின் படி, கம்பனி அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அல்லது வருமானம் மற்றும் செலவினத்தை எஸ்எல்எவ்ஆர்எஸ் ஒன்றினால் அனுமதித்தால் அன்றி எதிரீடு செய்தல் ஆகாது. இருப்பினும், | | |
| - வழங்குனரிடமிருந்து கிடைத்த ரூபா 64,314,868 தாமதக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவினத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டி ருந்தது. | எதிர்காலத்தில் தாமதக் கட்டணங்கள் கால ரீதியாக பிரித்தெடுக்கப்பட்டு கொள்வனவுக் கிரயத்திற்கு எதிராக எதிரீடு செய்வதற்குப் பதிலாக ஏனைய வருமானமாகக் காண்பிக்கப்படும். | நியமத்தின் தேவைப்பாடு களுடன் இணங்குதல் வேண்டும். |
| - ரூபா 9,174,474 தொகையான வாடிக்கையாளர் செலவு மீதிகள் மீளாய்வாண்டின் வியாபார பெறவேண்டியவைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | செலவு மீதி பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் புறம்பாகக் காண்பித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் இச்செலவு மீதிகள் பொருண்மையானதாகக் காணப்படவில்லை.<br><br>பாவனையாளர்களால் செலுத்தப்பட்ட சூரியவலு கடன் தவணைகளே இச்செலவு மீதிகளிற்கான பிரதான காரணமாகும். டன்படிக்கையின் பிரகாரம் சூரியவலு கடன் தவணைகள் உரிய காலத்தில் செலுத்தப்படுதல் வேண்டுமாயினும், பாவனையாளர்கள் இவற்றை வேறுபட்ட திகதிகளில் செலுத்துகின்றனர். ஆகையால், பட்டியலிடல் முறைமைக்கு இதனை இனங்காண முடியாதுள்ளது. இந்த குறித்துரைத்த திகதிகளின் பின்னர் கொடுப்பனவு முறைகளை ஒருங்கிணைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். | |
| - ரூபா 9,385,853 தொகையான முற்பணக் கொடுப்பனவுகளின் வரவு மீதி மீளாய்வாண்டின் சில்லறைக் கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுச் செலவினம் ஆகியவற்றுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பினும், செலவு மீதிகளை இனங்கண்டு அவற்றை தே.சே.வங்கிக்கு செலுத்துவதற்காக பட்டியலிடல் முறைமையிலிருந்து பல்வேறு அறிக்கைகளை உருவாக்குவதற்கு அவ்வப்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>2020.12.31 இல் உள்ளவாறு முறைமைக்கு பதியப்படாத நாணயக் கடிதங்களுடன் தொடர்புடைய ரூபா 8,772,473 பெறுமதியை இது உள்ளடக்குகின்றமையால் அத்தொகை கடன் கொடுத்தோரில் வரவு மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. | |
| (ii) நிதிக் கூற்றுக்களின் படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடி நுகேகொட, நீர்கொழும்பு மற்றும் காலி கிளைகளின் நடைபெற்று வருகின்ற மூலதன வேலைகளின் | 2016 இல் ப்ரோன்டோ முறைமையின் முன்னைய பதிப்பிலிருந்து சில பதிவுகள் பெயர்த்தெடுக்கப்பட்டன. சில தொழில்களிற்கான பதிவுகள் வேலைக் கிரயமிடல் முறையில் இருதடவைகள் பதியப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. | முறைமையிலுள்ள இந்த சிக்கலை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதிகள் முறையே ரூபா 215,834,467 ரூபா 29,970,666 மற்றும் ரூபா 77,226,400 ஆகும். இருப்பினும், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகளின் அறிக்கையின் படி, மேற்படி மீதிகள் முறையே ரூபா 237,329,923, ரூபா 35,308,618 மற்றும் ரூபா 65,301,260 ஆகும். அதன்படி, அந்த மீதிகளிற்கடையே முறையே ரூபா 21,495,456 ரூபா 5,337,952 மற்றும் ரூபா 11,925,140 வேறுபாடு காணப்பட்டது. | இந்த இடைவெளிக்கு இதுவே காரணமாக இருக்கலாம். புரோண்டோ சிஸ்டம் சேவை வழங்குநர்களுடன் இந்த விடம் குறித்து ஐரீ திணைக்களம் விசாரித்து வருகிறது. | |
| (iii) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் பட்டியலிடல் முறைமையிலுள்ள மீதிக்கும் இடையே ரூபா 13,548,574 வேறுபாடு காணப்பட்டது. | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. 2016 இல் முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் காரணமாக புரண்டோ இல் இந்த மீதி காண்பிக்கப்படுகின்றது. இந்த விடயம் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அதற்கேற்ப திருத்தம் மேற்கொள்ளப்படும். | இந்த விடயத்தை திருத்து வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) கால வைப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் மீளாய்வாண்டில் இனங்காணப் பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள ஏனைய நிதிச் சொத்துக்களின் வட்டி வருமானம் முறையே ரூபா 136,806,661 மற்றும் ரூபா 67,972,005 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் 2021 இல் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டுக் காலத்திற் குரிய கசல வட்டி வருமானத்தையும் இனங் காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) நுகேகொட கிளையால் 2020 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,997,445 மில்லியன் தொகையான காசு வைப்பு மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வங்கி மேலதிகப்பற்றாக இனங்காணப்பட்டிருந்தது. | 2021 மார்ச் மாதத்தில் தேவையான சீராக்கம் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்டது. | இந்த சிக்கலை திருத்துவ தற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) நிதிக் கூற்றுக்களின் படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் ரூபா 164,892,477 ஆன போதிலும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் பட்டோலையின் படி அந்த மீதி ரூபா 154,739,719 ஆனமையால் அச்சொத்து ரூபா 10,152,759 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மாதாந்த வாடகை அடிப்படையில் லெகோ ஆல் பெறப்பட்ட நிலங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு கையெழுத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையின் படி இந்த RoU மற்றும் கடன் வாங்கும் பொறுப்பு என்பன உருவாக்கப்பட்டது. முன்னைய ஆண்டிலிருந்து நடப்பாண்டுக்கு எதிர்பார்த்த குத்தகை கால மதிப்பீட்டின் வேறுபாடு காரணமாக இந்த கணக்கீட்டு இடைவெளி எழுவதுடன், அதன் விளைவாக தேறிய தற்போதைய பெறுமதி வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது. 2021 ஆம் ஆண்டில் கணக்கீடுகளை மறுபரிசீலனை செய்து கணக்கு புத்தகங்களில் பொருத்தமான சீராக்கல்களைச் செய்வோம். | இந்த சிக்கலை திருத்து வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (vii) மீளாய்வாண்டிற்கான வரையறுக்கப்பட்ட அன்டெ லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனியின் வருமான வரிச் செலவினம் ரூபா 6,092,227 ஆகக் காணப்பட்டது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான ஒன்றித்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் இது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் தேவைப்படுமாயின் 2021 இல் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | இந்த சிக்கலை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (viii) பயன்பாட்டு உரிமைச் சொத்துக் களின் ரூபா 48,719,696 தொகையான பெறுமானத்தேய்வு இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | RoU சொத்துக்களின் தேய்மானத்துடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகள் பொதுப் பேரேட்டுக் கணக்குகளிற்கு சரியாக பதிவிடப்பட்டன. இருப்பினும், நிதிக் கூற்றுக்களில் கைபடத் தயாரிக்கையில் இந்த பொதுப் பெரேட்டுக் குறியீடுகள் தவறுதலாக இருப்பு மீதிக்கு பதவியப்பட்டது. இந்த வழுவை 2021 இல் நாம் திருத்துவோம். | இந்த சிக்கலை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ix) 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்காக பாதுகாப்பு வைப்பு மீது கிடைத்திருந்த ரூபா 8,703,024 வட்டியானது முதலீடு களின் மீது பெறப்பட வேண்டிய வட்டியின் கீழ் பிழையாக பதியப்பட்டிருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண் டிற்கான வட்டி வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தேவையான சீராக்கல்கள் 2021 இல் மேற்கொள்ளப்படும். | இந்த சிக்கலை திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (x) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட லங்கா புரோட் பேன்ட நெட்வேர்க் (தனியார்) கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 தொகையான முதலீட்டுடன் தொடர்புடைய பங்குச் சான்றிதழை அல்லது வேறு ஏதேனும் போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றை எனக்குப் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை. | பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இந்தக் கம்பனியால் முதலீடுகளிற்கான பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் அதனை அறவிடுவதற்கான சட்ட ஆலோசனையினை சட்டமா அதிபரிடமிருந்து லெகோ கோரியுள்ளது. | குறித்த மீதிக்கான பங்குச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு அல்லது அதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 கம்பனியின் தொடந்தியங்கும் இயலுமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (டிபிசிஎல்) கணக்காய்வாளர் அதன் நிதிக் கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்தி லெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார். | 50 மெகாவாட் சூரிய சக்தி மற்றும் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அமைச்சரவை 2018 மே மாதத்தில் அங்கீகாரம் வழங்கியிருந்து. சாம்பூர் இல் ஒதுக்கப்பட்ட இடத்தைப் பயன்படுத்தி 50 மெகாவாட் | உத்தேச செயற்திட்ட ங்களை அமுல்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட இக்கம்பனி, அதன் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கை களை 2016 ஆம் நிதி ஆண்டில் கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டி ருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடு களில் எவ்வித முன்னேற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
அதற்கிணங்க, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமையை இது சுட்டிக் காட்டுகின்றது.

சூரியசக்தி மின்வலு ஆலையை டிபிசிஎல் ஆல் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், என்பிரீசீ மற்றும் இ.மி.ச. இனால் 50:50 பங்குகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கம்பனியினால் கெரவலபிடியவில் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதுடன் தற்போது டிபிசிஎல் இல் சூரியசக்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு டிபிசிஎல் இன் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. சூரிய சக்தி திட்டத்தை தொடங்குவதற்காக இ.மி.ச. இற்கும் இந்தியாவின் நெஷனல் தெர்மல் பவர் கம்பெனி லிமிடெட் (என்.டி.பி.சி) இற்கும் இடையே கூட்டு முயற்சியில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை 2021 இல் பணிப்பாளர் சபை மேற்கொள்ளவுள்ளது. எவ்வாறாயினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டமா அதிபரிடமிருந்து தேவையான சட்ட விளக்கங்கள் பெறப்படுதல் வேண்டும்.

இ.மி.ச. இற்கும் என்டிபிசி இற்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இரு கட்சிகளும் 2019 அக்டோபர் 25 ஆம் தேதி கெரவலப்பிட்டியில் உள்ள எல்என்ஜி மின்நிலையத்தை மேம்படுத்துவதற்காக கூட்டு முயற்சியில் கையெழுத்திட்டன. மேலும், கம்பனியின் அகவிதிக்கான சட்டமா அதிபரின் தெளிவுபடுத்தல்கள் 2021 யூலை மாதத்தில் கிடைத்தது.

கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக கலந்துரையாடல்களின் செயல்முன்னேற்றம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்காலத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை கருதுகிறது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 42,358 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய ரூபா 5,122 மில்லியன் மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 2,671 மில்லியன் தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக | வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் பகுப்பாய்வின் போது, வியாபாரக் கடன்பட்டோரின் நிலுவைத் தொகையில் 88% ஒரு வருடத்திற்கும் குறைவானதாக காணப்பட்டதுடன் 12% மாத்திரமே ஒரு வருடத்திற்கு மேல் நிலுவையில் உள்ளது. ஓராண்டுக்கும் மேல் நிலுவையில் உள்ளவற்றில் 52% மீதி ஐந்து வருடங்களுக்கு மேற்பட்டவை ஆகும், | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவ தற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அறவிடப்படாதிருந்தது.

அது மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 6% ஆகும். வியாபாரக் கடன்பட்டோரை அறவிடுவதற்கு அனைத்து விநியோகப் பிரிவுகளும் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்வதை இது குறிக்கிறது.

எவ்வாறாயினும், ஒரு வருடத்திற்கும் மேலான வியாபாரக் கடன்பட்டோரை மேலும் பகுப்பாய்வு செய்த போது, மீதமுள்ள 55% க்கும் அதிகமானவை இறுதியாக்கப்பட்ட வியாபாரக் கடன்பட்டோரை உள்ளடக்கியிருந்ததுடன் நீண்டகால நிலுவைத் தொகையை சேகரிக்க தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ரூபா 7,135,654,703 கூட்டுத் தொகையான சில்லறைக் கடன் பட்டோர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாதுள்ளது.

மேற்குறிப்பிட்ட சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் பிரதானமாக பின்வரும் மீதிகளை உள்ளடக்குகின்றன.

| மீதியின் தன்மை | தொகை ரூபா | காரணம் மற்றும் எடுக்கப்பட்டுள்ள மேலதிக நடவடிக்கை |
|---|---|---|
| பெறவேண்டிய பொ.சே.க. | 3,914,723,821 | ரூபா 1,573,231,409 பெறத்தக்க பொ.சே.க. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களில் பதிவழித்ததாகக் கூறப்படும் பொ.சே.க. இனை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதனைப் பதிவழிப்பதற்கான சபை பத்திரம் 2019 ஆம் ஆண்டில் ஒப்புதல் கோரி சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இ.மி.ச. கணக்காய்வுக் குழுவின் பரிந்துரை யானது, இந்த பொ.சே.க. நிலுவைகளை பதிவழிப்புச் செய்யாது இந்த நிலுவைகளை மீளப்பெற அல்லது வேறு ஏதேனும் செலுத்த வேண்டியவற்றிற்கு எதிராக இந்த விடயத்தை மின்வலு அமைச்சுக்கும் பொது திறைசேரிக்கும் அனுப்புவதற்கு மாற்று வழிகளைப் கண்டறிய வேண்டும் என்பதாகும். |

நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | | மூன்று வருட கால வரம்பு காரணமாக பொ.சே.க. மீதான இ.மி.ச. இற்கான சுமை 2018 இன் தேசிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஒரு பகுதியாக ஏற்கனவே பொது திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டது டன் வரி நிவாரண த்தின் ஒரு பகுதியாக 2020 ஆம் ஆண்டில் மின்வலு அமைச் சின் மூலம் மீண்டும் பொது திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீதமுள்ள பொ.சே. கட்டண நிலுவைத் தொகையான ரூபா 2,341.492,412.20 காலாவதியாக வில்லை. |
| பெறவேண் டிய நிறுத்திவை த்தல் வரி | 149,252,278 | ரூபா. 149,252,278 என்பது 2016 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்றது வைத்தல் வரி (WHT) மற்றும் நோஷனல் வரி வரவுகளை குறிக்கிறது. இந்த நிலுவைகள் அந்தந்த வருமான வரி அனுப்புதல்களில் WHT மற்றும் நோஷனல் வரி மீளளிப்பாக உள்ள டக்கப்பட்டுள்ளன. வருமான வரிக் கோப்புகள் உள் நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இன்னும் இறுதி செய்யப்படாததுடன் கணக்காய்வாளரின் WHT சான்றிதழ் மற்றும் நோஷனல் வரி உள்ளிட்ட தொடர்புடைய ஆதார ஆவணங்க ளின் கோரிக்கை திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டு ள்ளது. |
| ஏஈஎஸ் களனிதிஸ்ஸ | 1,368,961,445 | இ.மி.ச., சிபிசீ, திறைசேரி மற்றும் மின்வலு அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இணைந்து மின்வலு அமைச்சினால் இந்த நீண்டகாலமாக |

| | | |
|---|---|---|
| | | தீர்க்கப்படாதுள்ள நிலுவைப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்காக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது |
| நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை | 897,025,999 | மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையின் படி, இந்த மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆகையால், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| அகற்றிய டிரான்ஸபோமர்ஸ் | 497,144,445 | காரணங்களை கண்டறிய புலானாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 மீதி தொடர்ந்தும் அறவிடப்பாது வைக்கப்பட்டுள்ளது. | இந்த மீதியானது தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது. தூரியன் ஐயன் என்ட் ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.<br>லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த மீதி நீக்கப்படும். | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் பாரந்தூக்கி, காற்றுச் சீராக்கி மற்றும் மின்வலு பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 115,093,276 தொகையொன்று ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது வைக்கப்பட்டுள்ளது. | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிடுவதற்காக முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளின் தொகுதி, ஐயவினா 1.2.3(உ) இற்கு வழங்கப்பட்டுள்ள பதிலளிப்பின் மூலம் விரிவாக விளக்கப்பட்டுள்ளதுடன், அந்த பதிலளித்தலானது இந்த ஐயவினாவிற்கும் பொருந்தும்.<br>இருப்பினும், முன்னைய ஆண்டுகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட சிக்கலைத் | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகின்ற வேளையில் பெறவேண்டியவற்றை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தீர்ப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் மேலதிக பொ.மு. (ஏஎம்) அவர்கள் விசேடமாக அரசாங்க நிறுவனங்களின் வேலைக ளிற்கான கிரயத்தை அறவிடுதல் தொடர்பில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடை அமுல்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கியிருந்தார். அதற்கமைய, கிரய அறவிடும் வேலைகளை பொறுப்பேற்றல் மற்றும் சேவைநாடுனரிடமிருந்து பணத்தினை அறவிடுதல் என்பன காலரீதியாக கணக்காணிக்கப்படும். | |
| (உ) ரூபா 3,835,654 ஊழியர் கடன் தொகை மீளப் பெறப்படாமல் விநியோக பிரிவு 01 இல் காணப்படுகின்றது. | ஐய வினாவில் உள்ள மொத்த மீதியில் ரூபா 622,684.25 தொகை என்பது இராஜினாமா செய்த அல்லது பதவிகள் வறிதாக்கப்பட்ட ஊழியர்களுடன் தொடர்புடையதாகும். எனவே, கடன் நிலுவைத் தொகையை அவர்களின் ஊ.சே.நி. நிலுவைத் தொகையிலிருந்து மீளப் பெறுமாறு ஊ.சே.நி. பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபா 1,049,150 கடன் நிலுவை வைத்திருந்த ஊழியர் வெளிநாட்டு விடுமுறையில் இருந்து 2021 ஆம் ஆண்டில் வேலைக்குத் திரும்பியுள்ளதுடன் அவரது சம்பளத்தில் இருந்து மீளப்பெறுவதற்கு உரிய நிலுவைத் தொகை ஊதியப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) விநியோகப் பிரிவு 1 இன் கீழுள்ள மத வழிபாட்டு இடங்களிலிருந்து அறவிடப் படாது ரூபா 16,995,630 தொகை நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது. | மேற்குறிப்பிட்ட மீதியில், மாவட்ட செயலகத்தின் வேண்டுகோளின் பேரில் வடமத்திய மாகாணத்தில் பல்வேறு மத நிகழ்வுகளான பொசன் விழா, தலதாபெரஹர மற்றும் மல்லிகை மலர் பூஜை போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட தற்காலிக வெளிச்ச வேலைகளும் அடங்கும். 2012 - 2015 வரை மொத்த பெறவேண்டிய தொகை ரூபா 19,995,630 ஆனதுடன் மாவட்ட செயலகம் 2014 ஜூன் வரை ரூபா 3 மில்லியன் செலுத்தியுள்ளது. அதன் பின்னர் மீதித் தொகை தீர்க்கப்படாமல் உள்ளதுடன், திருப்திகரமான தீர்வு வழங்கப்படாத நிலையில் அதனைத் தீர்த்து வைக்குமாறு மாவட்ட செயலகத்திடம் கோரப்பட்டுள்ளது. | நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்வரும் ரூபா 4,306,803,673 கூட்டுத்தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2020 | **கடன்கொடுத்தோர் தொகை பதில்** | பொறுப்புக்களைத் தீர்ப்பதற்குத் தேவையான |

திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.

| கடன்கொடுத்தோர் பெயர் | தோகை<br>ரூபா |
|---|---|
| சுங்கம் | 1,065,828 |
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,034,971,432 |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 |

| பெயர் | ரூபா | |
|---|---|---|
| சுங்கம் | 1,065,828 | 2017/18 பருவ காலத்திற்கான ரூபா 1,065,828.00 பணமதிப்பிழப்பு கட்டணம் 2020 திசெம்பர் 31 வரை லக்விஜய பண மதிப்பிழப்பு கட்டணக் குழுவால் அங்கீகரிக்கப் படவில்லை. லக்விஜய பணமதிப்பிழப்பு கட்டணக் குழுவின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இத் தொகை செலுத்தப்படும். |
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,034,971,432 | அமைச்சரவை ஒப்புதலின் அடிப்படையில் 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு கட்டணம் தவணைக் கட்டண அடிப்படையில் CMEC இற்குச் செலுத்தப் பட்டுள்ளது. நிதிக் கூற்றுக் களில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,195,528,596.54 தொகை 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு களிற்காக செலுத்த வேண்டிய செயல்பாட்டு மற்றும் பராமரிப்புக் கட்டணத்தை உள்ளடக் குகின்றது. இ.மி.ச. இன் தற்போதைய பாதகமான நிதி நிலைமை காரணமாக மாதத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மாத்திரமே செலுத்தப்படுகின்றது. |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 | 2013/2014 வரி ஆண்டுக் கான ரூபா 1,270,766,413 பிடித்துவைத்த பங்கிலாப வரியானது 2009/2010 மற்றும் 2010/2011 க்கு கோரப்பட்ட பிடித்து வைத்த பங்கிலாப வரிக்கு எதிராக செலுத்தப்பட வேண்டிய பங்கிலாப வரியை பிரதிநிதி த்துவம் செய்கின்றது. கணக்குகளில் இந்த பொறுப்பைத் பதிவழிப்ப தற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்க ளத்தால் திரும்பப் பெறும் கோரிக்கைகள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. |

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) நொதர்ன் பவர் கம்பனி (பிரைவட்) லிமிடட் இற்குச்

மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு காரணமாக வடக்கு மின் நிலையம்

குறித்த மீதியை பதிவழிப்பதற்குத்

| | | | |
|---|---|---|---|
| செலுத்த வேண்டிய ரூபா 2.9 பில்லியன் தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக பரிமாற்றப் பிரிவின் வியாபார கடன்கொடுத்தோராக வைக்கப்பட்டுள்ளது. | 2015-01-27 முதல் மூடப்பட்டது. எவ்வாறாயினும், இது ஒரு வலுவூட்டப்பட்ட சூழ்நிலை என்று அறிவித்து இயலளவுக் கட்டணங்களுக்காக கம்பனி மாதாந்த விலைப்பட்டியல்களை வழங்கியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு நிலுவையில் இருந்ததால், இந்த விலைப்பட்டியல் பெறுமதிகளை இ.மி.ச. கணக்கிட்டுள்ளது. மின்வலு நிலையம் சுற்றுச்சூழல் சட்டத்தை மீறி இயங்குகிறது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால், இந்த விலைப் பட்டியல்களைத் தீர்ப்பதற்கு இ.மி.ச. இற்கு எந்தப் பொறுப்பும் இல்லை. இந்த தொகைகளை பதிவழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்படும். | தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை திருத்திய சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவுகள் | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 18.91 பில்லியன் பெறுமதியான 732.192 Gwh எரிசக்தி, மின் பிறப்பாக்க த்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிட மிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நாட்பட்ட IPP மின் நிலையங்களில் இருந்து மின்சக்தியை கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு பரிமாற்றல் அனுமதிப் பத்திரத்தையும் பெறுவதற்கு, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் (மின்சாரச் சட்டம்) பிரிவு 7 (1) அல்லது 43 (1) இல் தடைகளும் இல்லை. இந்த மூன்று நாட்பட்ட IPP மின் நிலையங்களின் காலாவதியான மின்வலு கொள்வனவு ஒப்பந்தங்களை (பிபிஏ) நீடிக்க இ.மி.ச. பியூசிஎஸ்எல் இன் ஒப்புதலை கோரியதுடன் கால நீடிப்புச் செய்யப்பட்ட பிபிஏக்களை அதன் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தது.<br><br>மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின் சாரத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இ.மி.ச. இந்த மின் நிலையங்களின் பிபிஏ களை | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காலநீடிப்புச் செய்தல் வேண்டும். மின்வெட்டை தவிர்ப் பதற்காக அமைச்சரவையின் ஒப்புதலுடன் இ.மி.ச. அவ்வாறு செய்தது. | |
| (ஆ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்திய சட்டத்தின் 7(1), 43(2) மற்றும் 43(7) ஆம் பிரிவுகள் | மின்வலு கொள்வனவு உடன் படிக்கைக்கு (PPAs) அங்கீகார த்தைப் பெற்றுக்கொள்ளாது, மேலதிக மாக 100 MW மின்வலு இயலளவு 2019 ஆம் ஆண்டில் ஆறு மாதங்களி ற்காக பிறப்பாக்க அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்காத மின்வலு உற்பத்தியாளர்களி டமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி முதல் 6 மாதங்களிற்கு காலநீடிப்புச் செய்யப்பட்டு ரூபா 3.26 பில்லியன் பெறுமதியான 78.669 Gwh எரிசக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை மற்றும் PUCSL ஆகிய இரண்டும் 2019 ஆம் ஆண்டில் 100 மெகாவாட் மேலதிக மின்சாரத்தை கொள்வ னவு செய்வதற்கு இ.மி.ச. க்கு ஆரம்ப ஒப்புதலை வழங்கியி ருந்தன. தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தின் அரசாங்க கொள்வனவு நடைமுறைகளை இ.மி.ச. பின்பற்றி கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதுடன்,<br>கொள்வனவுச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், கொள்வ னவு நடைமுறைக்கு அமைவான அனைத்து அங்கீகாரங்களும் பெறப்பட்டு, பிரிவு 43 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு<br>கையெழுத்திடப்பட வேண்டிய பிபிஏ வரைவு உடன்படிக்கைகள் ஒப்புதலுக்காக PUCSL இற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.<br>மின்சாரச் சட்டத்தின் பிரிவு 24 (1) (உ) இன் கீழுள்ள இ.மி.ச. இன் (பரிமாற்றல் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்) கடமைக்கு இணங்க எதிர்வுகூறப்பட்ட மின்சா ரத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு போதியளவு மின்சார இயலளவு காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இ.மி.ச. அமைச்சரவையின் அங்கீகார த்துடன் இக்கொள்வனவை மேற்கொண்டது.<br><br>இதேபோல், 2020 ஆம் ஆண்டுக்கு, அமைச்சரவை மற்றும் PUCSL ஆகிய இரண்டும் மேலதிகமாக ஆறு மாதங்களுக்கு மேற்படி கொள்வனவின் கீழான பிபிஏ களை நீடிப்பதற்கு கொள்கையளவில் ஒப்புதலை வழங்கியிருந்தன. அமைச்சரவை ஒப்புதலை பெறுவதற்கான உரிய செயல்முறையைப் பின்பற்றிய பின்னர், வரைவு உடன்படிக் கைகள் ஒப்புதலுக்காக PUCSL இற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. | சட்டத்திலுள்ள குறித்த தேவைப்பாடு களுடன் இணங்கி யொழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதியத்தில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996 மில்லியன் தொகையை மாத்திரம் சீஈபீ முதலீடு செய்திருந்தது. | இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ளமையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்டவுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த நிலையான சொத்துகளில் 1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | ஏற்பாடுகளிற்கு முரணாக, 2008 முதல் அவ்வப்போது வரிசை அமைச்சுக்கு விடுவிக்கப்பட் டிருந்த 56 ஊழியர்களிற்காக ரூபா 79.13 மில்லியன் தொகையினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. | **வரிசை அமைச்சுக்கு ஊழியர்களை விடுவித்தல்**<br>------------------------------------<br>ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமையால், ஏற்பட்டுள்ள செலவினத்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.<br><br>**சேமலாப நிதியத்துக்கு ஊழியர்களை விடுவித்தல்**<br>------------------------------------<br>வர்த்தமானியில் 2003 திசெம்பர் 31 அன்று வெளியிடப்பட்ட சேமலாப நிதிய விதிகளின் பிரிவு 20 (i) ன் படி, வீட்டு கடன்களை மீளாய்வு செய்வது தொடர்பான செலவுகளைத் தவிர்த்து, நிதியத்தின் ஏனைய அனைத்து நிர்வாக செலவுகளும் இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படுகிறது. நிதியின் ஆரம்பிக்கப்பட்டது முதல் (1969 நவம்பர் 01 முதல்) இக்கொள்கை பின்பற்றப்படுகின்றது. எனவே சேமலாப நிதியம் சார்பாக இ.மி.ச. ஆல் செய்யப்பட்ட செலவுகள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை.<br><br>மேலும், இந்த விடயத்தை இ.மி.ச. இன் சேமலாப நிதிய முகாமைத் துவக் குழுவில் (வர்த்தமானியின் மூலம் நிறுவப்பட்ட ஆளுகைக் குழு) முன்வைக்கப்பட்டதுடன், | சுற்றறிக்கை ஏற்பாடு களுடன் இணங்கி ஒழுகுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிர்வாகச் செலவுகளைச் செய்யும் தற்போதைய நடைமுறையைத் தொடர்வதற்கு 2021 பெப்ரவரி 11 அன்று நடைபெற்ற கூட்டத்தில் குழு முடிவு செய்தது. ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவ மற்றும் நிர்வாகச் செலவுகள் சபையால் பொறுப் பேற்கப்படுகின்ற தற்போதைய கொள்கையை தொடர்வதற்கு குழு ஒப்புதல் அளித்தது. | |
| (உ)பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 1994 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்ட 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அமைச் சின் கணக்கா ய்வுக் குழுவில் 2020 செப்தெம்பர் 25 அன்று எடுக்க ப்பட்ட தீர்மானம் | ஏற்பாடுகள் மற்றும் தீர்மானங்களிற்கு முரணாக ரூபா 1.2 பில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் விடுமுறை காசாக்கல் என்ற வகையில் செலுத்தப்பட்டி ருந்தது. | சபையின் அங்கீகாரத்துடன், 1984 முதல் பயன்படுத்தப்படாத சுகயீன விடுமறைகளின் நிமித்தம் அதன் ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக இதனை இ.மி.ச. செலுத்தியிருந்தது. சபை வேறு விதத்தில் தீர்மானமெடுக்கும் வரை இந்தக் கொடுப்பனவுத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கு 2006 ஆம் ஆண்டில் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | சுற்றிக்கை ஏற்பாடு கள் மற்றும் தீர்மான ங்களுடன் இணங் கியொழுகுதல் வேண்டும். |
| (ஊ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் 47 ஆம் பிரிவு | ஏற்பாட்டுக்கு முரணாக, உழைப்புக்களை கணிப்பிடு கையில் எக்சோடஸ் கொடுப்ப னவு, முதுமானிப் பட்டக் கொடுப்பனவு மற்றும் உயர் தொழில் கொடுப்பனவு / பகுதி உயர் தொழில் கொடுப்பனவு ஆகியவற்றிலிருந்து ஆகக் கூடிய கொடுப்பனவை இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>*பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்*<br><br>*பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு*<br><br>அதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. அதற்கமைய, ஊழியர்களுக்கான சேமலாப நிதியை கணிப்பிடுகையில் ஆகக்கூடிய கொடுப்பனவு கருத்திற் கொள்ளப்பட்டது. | |
| (எ) வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் உடன் 2007 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் 6.1.3 ஆம் பிரிவு | 220kv வலுவில் இ.மி.ச. இனால் கம்பனிக்கு வழங்கப் பட்ட மின்சக்தி, 220kv வலுவில் மின்சக்தியினை வழங்குவதற்கு எந்த விதிமுறைகளும் நிபந்த னைகளும் இல்லை என்றால், அத்தகைய விநியோகத்தின் போது இ.மி.ச. இன் வழங்கல் நேரத்தில் இ.மி.ச. இன் தொழில்துறை நுகர்வோருக்காக இ.மி.ச. இடமிருந்து கம்பனி அறவிடு கின்ற மின்சக்தி கிரயத்தில் காணப்படுதல் வேண்டும். இந்த விதிமுறைக்கு மாறாக, கம்பனிக்கு இ.மி.ச. இனால் வழங்கிய மின் சக்தி கட்டண வீதத்தை கணிப்பிடுகையில் இயலளவுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை கருத்தில் கொள்ளாமல் எரிசக்தி கட்டணத்தை மட்டுமே இ.மி.ச. கருத்தில் கொண்டிருந்தது. | இறக்குமதி செய்யப்படுகின்ற எரிசக்தி தொடர்பில் பிபிஏ களில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் இ.மி.ச. இன் கட்டணத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை இணைக்கப்பட்ட மின்னழுத்தம் 33kV க்கு மேல் காணப்படுகின்ற பெரும்பாலான சுயாதீன அனல்மின் நிலையங்களில் தெளிவற்றதாக உள்ளது. எனவே, ஒரு விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதுடன் இந்தப் பிரச்சினையை முறைப்படுத்த ஒரு நிபுணர் குழுவின் பரிந்துரை அவசியமாகும். | குறித்த விடயத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான தயார் நிலை யிலுள்ள மின்பிறப்பாக்கி களை பயன்படுத்துவதன் மீதான அமைச்சரவை தீர்மா னத்தை அமுல்படுத்துவதற்கு இ.மி.ச. தவறியிருந்தது. | பல்வேறு காரணங்களால் மேற்படி தீர்மானம் இதுவரை அமுல்படுத்த ப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை அமு ல்ப்படுத்த தேவவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார திருத்திய சட்டத்தின் 24(1) ஆம் பிரிவு | நீண்டகால மின்வலு பிறப்பா க்க விரிவாக்கத் திட்டத்தில் காணப்படுகின்றவாறு மின் வலு உற்பத்தி நிலையங் கள் ஆரம்பிக்கப்படாமையால் நியாயமான முன்னறிவிப்புத் தேவையை பூர்த்தி செய்ய உற்பத்தி ஆலைகளில் போதுமான இயலளவு இருப்பதை (பரிமாற்ற உரிமம் பெற்றவர்) உறுதிசெய்ய இ.மி.ச. தவறியிருந்ததுடன் அதன் காரணமாக அனல் | நீண்ட கால, குறைந்த விலை மின் உற்பத்தி நிலையங்கள் எதிர்பார்த்த நேரத்தில் உருவாக்கப்படாமல் இருக்கின்ற நிலையில், (அதற்குப் பல காரண ங்கள் உள்ளன, அவற்றில் பெரும்பாலானவை இ.மி.ச. இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட் டவை), பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக குறுகிய கால மின்வலு இயலுமையை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இ.மி.ச. உள்ளது டன் இது மின்சார சட்டத்தின் | குறித்த தேவைப்பட் டுடன் இணங்குவத ற்காக நீண்ட கால, குறைந்த விலை மின் உற்பத்தி நிலைய ங்களை உருவாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மின்சாரம் குறுங்கால அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பிரிவு 24(1)(உ) இன் கீழ் இ.மி.ச. இன் கடமைக்கு இணங்குவத ற்காக (பரிமாற்ற உரிமம் வைத்திருப்பவர் என்ற முறையில்) மின்சாரத்திற்கான முன்னறிவி க்கப்பட்ட தேவையை பூர்த்தி செய்ய போதுமான உற்பத்தி திறன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.<br>எனவே, கூறப்பட்ட பிரிவு 24(1)(உ) இற்கு இணங்க கொள்வனவு செய்யப்படுவதுடன், எனவே அதை மீறுவது அல்ல. |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரி / உயர்தர தனிப்பட்ட வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கும் 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கும் முரணாக 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியை / உயர்தர தனிப்பட்ட வருமான வரியை கழிக்காமல் ரூபா 4.98 பில்லியன் தொகையை இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிருந்து செலுத்தியிருந்தது. ரூபா 5.48 மில்லியன் வரி மீதான வரிக் கட்டணம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 57.04 மில்லியன் ஆகும். | 2020 நவம்பர் மாதம் முதல், இ.மி.ச. இன் ஊழியர்களால் உயர்தர தனிப்பட்ட வருமான வரி (ஏபிஐரீ) செலுத்தப்படுகின்றது. | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் சுற்றிக்கைளுடன் தொடர்ச்சியாக இண ங்குதல் வேண்டும். |

# 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயினது தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 97,319 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 53,831 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை

விளைவித்திருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 43,488 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. நீர்மின்சார உற்பத்தி 3 சதவீதத்தினால் அதிகரித்தமையால் எரிபொருள் கிரயம், நிலக்கரி மற்றும் மின்வலுக் கொள்வனவு என்பன முறையே 43 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 9 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் மின்வலு பிறப்பாக்கல் பிரிவின் செயற்பாட்டு மற்றும் பேணுகைச் செலவினம் 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை போன்றன இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும். அத்துடன், தேவைகளின் கவனயீர்ப்பு மற்றும் நிலக்கரியினதும் எரிபொருளினதும் விலைகளில் ஏற்பட்ட குறைவு என்பனவும் இந்த முன்னேற்றத்திற்கான ஏனைய காரணமாகும்.

எனினும் ரூபா 73,895 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், வரிச் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான சீஈபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 101,054 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 12,699 மில்லியனால் அல்லது 11 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 2.2 போக்கின் மீதான பகுப்பாய்வு

### (i) மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க் கிரயம் (வழங்கல் மற்றும் பரிமாற்றல் கிரயம் தவிர)

நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது இ.மி.ச. இன் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்புக் காரணமாக சீஈபீயால் இந் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும் இ.மி.ச. இன் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் இ.மி.ச. இன் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2020 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| மூலம் | 2020 | 2019 | அதிகரிப்பு /(குறைவு) | |
|---|---|---|---|---|
| | GWh | GWh | GWh | % |
| நீர்மின் | 4,958 | 4,795 | 163 | 3 |
| அனல்மின் | 4,179 | 5,012 | (833) | 17 |
| நிலக்கரி | 5,754 | 5,361 | 393 | 7 |
| காற்று | 332 | 348 | (16) | 5 |
| ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 218 | 220 | (2) | 1 |
| கூரைக்கு மேலான சூரியசக்தி | 269 | 182 | 87 | 48 |
| சிறிய தீவுகள் | 3 | 4 | (1) | 25 |
| **மொத்தம்** | **15,713** | **15,922** | **(210)** | **1** |

அதற்கமைய, நீர், நிலக்கரி மற்றும் கூரைக்கு மேலான சூரியசக்தி மின்சாரம் என்பன மீளாய்வாண்டில் முறையே 3 சதவீதம், 7 சதவீதம் மற்றும் 48 சதவீதத்தினால் அதிகரித்திருக்க நாட்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக அனல், காற்று மற்றும் ஏனைய மாற்றப்படமுடியாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்பவற்றின் உற்பத்தி முறையே 17 சதவீதம், 5 சதவீதம் மற்றும் 1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**(ii) நேர்க் கிரயம்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டிற்கான நேர்க் கிரய மூலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2020 | | 2019 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 30,195 | 11 | 53,238 | 17 |
| நிலக்கரி | 42,805 | 16 | 46,566 | 14 |
| மின்வலுக் கொள்வனவு | 108,401 | 40 | 118,665 | 37 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 56,481 | 21 | 73,121 | 23 |
| பெறுமானத்தேய்வு | 32,252 | 12 | 30,932 | 10 |
| **மொத்த நேர்க் கிரயம்** | **270,134** | **100** | **322,522** | **100** |

மேற்படி தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நீர்மின்சார உற்பத்தி 3 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அதன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டுக்கான மின்வலுக் கொள்வனவுக் கிரயங்கள், நிலக்கரி மற்றும் எரிபொருள் கிரயங்கள் முறையே ரூபா 10,264 மில்லியன், 3,761 மில்லியன் மற்றும் ரூபா 23,043 மில்லியனால் அல்லது 9 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 43 சதவீததத்தால் குறைவடைந்திருந்தன. அதேவேளை, செயற்திட்டங்களின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் மீளாய்வாண்டின் போது 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அத்துடன், மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகள் காரணமாக மின்வலு உற்பத்திக்கான நிலையான கிரயங்கள் தவிர்க்க முடியாதவையாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் விளைவாக, பொதுமக்களிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது என்ற சீஈபீயின் பிரதான நோக்கத்தை அதனால் அடைய முடியாது போயிருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

**2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீ இன் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 59,370 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 93,834 மில்லியன் நேர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 37 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது.

**2.3.2 உரிமை மூலதனத்திற்கான கடன்**

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீ இன் உரிமை மூலதன மீதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 6 சதவீதத்தால் அல்லது ரூபா 19,936 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்தால் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 84 சதவீதம் அல்லது ரூபா 475,440 மில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அத்துடன், குழுமத்தின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டின் 114 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 119 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

**2.3.3 இலாபத்தன்மை**

2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 24.12 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 21.21 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 16.72 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது. (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.63 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த நட்டம் ரூபா 4.49 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 7.49 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த

நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 40 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வுகை** | **அலகொன்றிற்கான பங்களிப்பு (kWh)** | |
|---|---|---|
| | **2020** | **2019** |
| | **ரூபா** | **ரூபா** |
| உள்நாடு | (6.35) | (9.16) |
| மதத்தலங்கள் | (13.99) | (15.98) |
| பொது நோக்கம் | 2.72 | 0.65 |
| ஹோட்டல் | (3.11) | (5.58) |
| கைத்தொழில் | (6.37) | (8.57) |
| அரசாங்கம் | (3.14) | (5.11) |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (5.18) | (10.67) |
| வீதி விளக்குகள் | (21.18) | (23.28) |
| பங்களிப்பு (சராசரி மொத்த நட்டம்) | (4.49) | (7.49) |

விற்பனை செய்யப்பட்ட மொத்த அலகுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மாத்திரமே மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு நேர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 318 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள், ஹொட்டேல், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018-2037 வரையான நீண்ட கால மின்பிறப்பாக்கத் திட்டத்தின் படி, சீதாவ கங்கை நீர் மின்வலு செயற்திட்டம் 2022 க்குள் தொடங்கப்படுதல் வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (பிஎம்யு) 2016 செப்டம்பர் இல் நிறுவப்பட்டதுடன் சாத்தியக் கூறு ஆய்வு, விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி மனு ஆவணங்களின் வரைபினைத் தயாரித்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற் திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா | நிதியைப் பாதுகாக்க வேண்டிய எந்த அதிகாரமும் இ.மி.ச. இற்கு காணப்படாமையால் இலங்கை அரசாங்கத்தினால் இ.மி.ச. இற்கு வழங்கப்படுகின்ற நிதியைப் பயன்படுத்தும் ஒரே எண்ணத்துடன் சீதாவக கங்கை நீர் மின் செயற்திட்டத்தை (எஸ்ஜிஹெச்பி) இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்பிறப்பாக்க வசதியாக 2016 ஆம் ஆண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகை இ.மி.ச. அமைத்தது. அதன்படி, செயற்திட்ட முகாமைத்துவ அலகானது சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான வடிவமைப்பு, நிதியாளரைத் தேடுவது மற்றும் வரைவு கேள்விமனு ஆவணங்களைத் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. இதற்காக ரூபா ரூபா 289 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் (தொழில்நுட்ப மற்றும் நிதிசார்) சாத்தியக்கூற்று ஆய்வானது ஒரு செயற்திட்டத்தின் மிக முக்கியமான விடயமாகும். எவ்வாறாயினும், 2020-07-09 அன்று, இ.மி.ச. அதன் PE/DEV/02/171/2016 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பின்வரும் இரண்டு நிதியிடல் விருப்பங்களைக் கருத்தில் கொள்ளுமாறு மின்வலு அமைச்சுக்கு | ஆகக்குறைந்த கூறுவிலை /அபிவிருத்திக் கிரயத்திற்கு காரணமாக மேற்கொள்ளப்பட்ட சகல ஆய்வுகளையும் பகிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

289 மில்லியன் கிரயம் ஏற்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 20 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒடுக்கு வதற்கு சபை தீர்மானித்தது. மேலும், மேற்குறித்த செயற் திட்டத்தை ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடெட் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2021 பெப்ரவரி 23 அன்று நடைபெற்ற சபை கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்தை எஸ்எல் இக்கு ”ஒற்றை மூல கொள்வனவு” என்ற அடிப்படையில் வழங்குவதற் காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. எனவே இந்த செயற்திட்டத் திற்கான முதலீட்டை முதலீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால், இந்த செயற்திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 289 மில்லியன் செலவானது இ.மி.ச. இற்கான செலவாகவே காணப்படும்.

அறிவித்திருந்தது.

- நிதி திரட்டுவதற்காக பசுமை பிணைப்பத்திரம் வழங்குதல்
- நிர்மாணித்து இயக்கிய பின்னர் கைமாற்றும் (BOOT) அடிப்படையில் அமைந்த கேள்விகோரலை முன்னெடுத்தல்.

இதன் விளைவாக, இ.மி.ச. இற்கு அபிவிருத்தி மாதிரியை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுடன் இ.மி.ச. இற்கு சொந்தமான ஆலை என்ற நிலைப்பாட்டிலிருந்து BOO ஆலை என்ற கருப்பொருளுக்கு அமைவானதாக அபிவிருத்தி மாதிரியை மாற்றியமைத்து போட்டி கேள்விகோரலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அவர்களின் இடர் மட்டத்தைக் குறைக்கும் நோக்குடன் சாத்தியக்கூற்று ஆய்வு, EIA, அனைத்து பரிசோதனை அறிக்கைகள், வடிவமைப்புகள் போன்ற அனைத்து ஆய்வுகளையும் சாத்தியமான கேள்விதாரர்களுடன் (அல்லது அபிவிருத்தியாளர்கள்) பகிர்ந்து கொள்ள முன்மொழியப்பட்டதுடன் அதன் மூலம் குறைந்த கேள்விப்பத்திர விலை/ அபிவிருத்தி கிரயம் ஏற்படும். இவ்வாறு, ஆய்வுகளுக்கு ஏற்படும் கிரயத்தின் ஒரு பகுதியானது குறைந்த கட்டணங்கள் மூலம் (இறுதி செயற்திட்ட அபிவிருத்தியாளரால்) இ.மி.ச. இற்கு மீளளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தின் திறப்பு விழாவுக்கான பாதிடப்பட்ட செலவினத் தொகை ரூபா 13 மில்லியன் ஆன போதிலும் அதற்காக ரூபா 18.83 மில்லியன் செலவிடப்பட்டி ருந்தது. இந்த மேலதிகத் தொகைக்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட் டிருக்கவில்லை. இந்த திட்டத்தின் திறப்பு விழா 2020 திசெம்பரில் நடைபெற்றிருந்த போதிலும், நடுக்குடா மின் நிலையத்தை பூரணப்படுத்தல் தாமதம் காரணமாக காற்றாலை மின்சாரத்தை தேசிய மின் அமைப்பில் இணைத்துக் கொள்ளல் 2021 மே வரை தாமதமடைந் திருந்தது.

**மன்னார் காற்றாலை மின்வலு நிலைய திறப்பு விழா**

100 மெகாவாட் திறன் கொண்ட நாட்டிலேயே மிகப்பெரிய காற்றாலை பூங்காவான மன்னார் காற்றாலை மின் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாய தீர்மானத்தை இலங்கை மின்சார சபை எடுத்தது. இது அரசாங்க கொள்கை கட்டமைப்பு மற்றும் இ.மி.ச. இன் கூட்டிணைந்த இலக்குகளின் கீழ் வருகின்ற ஒரு பாரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டமாக இருப்பதால், இ.மி.ச. இன் பொது முகாமையாளரிடம், இந்த அபிவிருத்திப் பணிகளைப் பற்றி பொதுமக்களுக்கு விளக்கமளிக்க ஊடகங்களை ஏற்பாடு செய்யுமாறு பணிப்பாளர் சபை கோரியது.

2020 இன் பிற்பகுதியில், கோவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையிலும் கூட அபிவிருத்தி செயல்முறையை விரைவுபடுத்த இ.மி.ச. இன் முகாமைத்துவம் தீர்மானித்தது. இ.மி.ச. இன் முகாமைத்துவக் முழுவானது திட்டக் குழுவின் அர்ப்பணிப்பை மிகவும் பாராட்டியதுடன்

பாதிடப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் செலவு செய்வதுடன் தேவைப் படுகையில் சபை ஒப்புதலுடன் அதனை திருத்துதல் வேண்டும்.

திட்டத்தின் இயலளவில் ஒரு முதலாம் கட்ட பகுதியை இணைக்க முடிவு செய்தது. மேலும், இந்த திறப்பு விழாவை ‘‘அரச/தேசிய விழாவாக” அதற்கு பிரதம அதிதியாக கௌரவ பிரதமரின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் மின்வலு அமைச்சு அறிவித்திருந்தது.

நிகழ்வு நடந்த இடமான மன்னார், நடுக்குடா மிகவும் தொலைவில் உள்ளமையால் மதிப்பீட்டு அடிப்படையில் பாதீடு தயாரிக் கப்பட்டதுடன், நிகழ்வுக்கான முகாமைத்துவ சேவைகளுக்குரிய சரியான செலவு கூறுகளை மதிப்பிடுவது கடினமாக இருந்தது. நிகழ்வின் முகாமைத்துவச் சேவைகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவை விட உண்மையான செலவு அதிகமாக காணப்பட்டமையால், அதற்கான உண்மையான செலவுடன், பிரதேச கொள்வனவுச் சபையின் - செயற்திட்டப் பிரிவுக்கு இது சமர்ப்பிக்கப்பட்டது. நிகழ்வு முகாமைத்துவ சேவைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 9,674,887.86 உண்மையான தொகைக்கு 2020 திசெம்பர் 23 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கூறியவை தவிர இ.மி.ச. அபிவிருத்தி நடவடிக்கைகள்/நடப்பு விவகாரங்கள் போன்றன தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த DGM (B&OS) மற்றும் AGM (செயற்திட்டங்கள்) ஆகியவற்றின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிலிருந்து 2020 இல் இருந்து ரூபா 4.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, காற்றாலை மின் நிலையத்தின் திறப்பு விழாவுக்கான செலவு தேவையான பாதீட்டு ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்டது.

**நடுக்குடா மின்நிலையத்தை பூரணப்படுத்தல் தாமதம்**

நடுக்குடா துணை மின்வலு நிலையத்தின் கட்டுமானமானது ஆ.அ.வங்கியின் கடனினால் நிதியளிக்கப்பட்ட முற்றிலும் தனி ஒப்பந்தமாகும். ஒப்பந்த நடைமுறைகளின்படி, இந்த ஒப்பந்தம் முடிவடையும் திகதி 2021.04.15 ஆகும். அதன்படி, இது 2021.04.15 இற்குள் முடிக்கப்பட்டமையால் ஒப்பந்த கால தாமதம் எதுவும் இல்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஒக்தோபர் 16 இல் உள்ளவாறு ரூபா 1,044,791,162 பெறுமதியுடைய 51,439.64 | இ.மி.ச. இன் பொது முகாமையாளரின் 2020/GM/42/FM ஆம் இலக்க 2020 செப்தெம்பர் 03 ஆந் திகதிய சுற்றறிக்கையின் படி ஒரு | பெற்றுக்கொண்ட இருப்பை அளவிடுவத ற்கான நடைமுறையை |

| | | |
|---|---|---|
| மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின் றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வுக் குழுவினால் பௌதீக இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 1,044,791,162 பெறுமதியுடைய 51,439.64 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பற்றாக்குறையாக வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட் டுள்ளது. ஆகையால், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 9,991,897,000 நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை.<br><br>மேலும், ரூபா 3,207,727,326 தொகை தொடர்ந்தும் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக காணப்படுவதுடன் 2019 திசெம்பர் 31 வரை மேலதிக நிலக்கரி இருப்பாக காணப் பட்ட ரூபா 1,301,433,359 தொகை 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய சபை தீர்மானத்தின் படி நிறுத்தி வைத்த உழைப்புக்கு சாட்டப்பட்டிருந்தது. | பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது;<br><br>கூறப்பட்டவை;<br>"லக்விஜயா மின்வலு நிலையத்திலுள்ள நிலக்கரி கையிருப்பு மற்றும் மின்பிறப்பாக்க மற்றும் பரிமாற்ற பிரிவுகளிலுள்ள உதிரி பாகங்களின் மெய்மையாய்வு அந்தந்த பிரிவுகள் மற்றும் கிளைத் தலைவர்களின் தீர்மானத்தின் படி மிகவும் பொருத்தமான மற்றும் வசதியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்."<br><br>கூறப்படாதவை.<br>சபை அங்கீகாரம் மற்றும் தேவையான குழு அறிக்கைகளின்படி மேற்கூறிய இருப்புச் சீராக்கம் கணக்கு புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டது. மீதமுள்ளவை 2021 ஆம் ஆண்டில் அகற்றப்படும். | நிறுவி, ஆண்டின் இறுதியில் பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) இ.மி.ச. பல வருடங்களாக மின்சாரத்தை லெகோ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற் கிடையே சுமூகமான செயற் பாடுகளை உறுதிப்படுத்து வதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்தி டப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக் கைகள் காணப்படவில்லை. | **லெகோ உடனான உடன்படிக்கை**<br><br>இந்த விடயத்தின் செயல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது<br>• இ.மி.ச. மற்றும் லெகோ ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் உயர் அதிகாரிகளின் பங்கேற்புடன் ஒரு வரைவு உடன்படிக்கையை குழவொன்று தயாரித்துள்ளதுடன் அது குறித்து சட்டமா அதிபரின் (AG) கருத்தை கோரப்பட்டுள்ளது.<br>• AG யின் கருத்துப்படி இந்த குழு தேவையான திருத்தங்களை செய்துள்ளதுடன் "(இறுதி மின் விற்பனை உடன்படிக்கை" "AGM (டிரான்ஸ்மிஷன்) க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>• இ.மி.ச. இன் பொது முகாமையாளர், குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோ இன் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட சில ஒப்புதல்கள் குறித்து இணைக்கப்பட்ட | தரப்புடன் சுமூகமான செயல்பாடுகளை உறுதி செய்வதற்காக அந்த இரு தரப்பின ருடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். |

2015 மார்ச் 26 ஆந் திகதியிட்ட கடிதத்தினால் (பின்னிணைப்பு 08.அ) லெகோவின் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். இ.மி.ச. பொது முகாமையாளரின் அக் கடிதத்தில், இந்த விஷயத்தை லெகோ இன் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் லெகோவின் 03 அதிகாரிகளால் செய்யப்பட்ட ஒப்புதல்கள் குறித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் பார்க்கவும்
இந்த விடயம் தொடர்பில் தயவுசெய்து சனவரி 28 ஆம் தேதியுடன் இணைக்கப்பட்ட கடிதத்தையும் 2020 சனவரி 30 ஆம் தேதியிட்ட இ.மி.ச. ஜிஎம் இன் குறிப்புக்களையும் பார்க்கவும். அதன்படி, இ.மி.ச. ஜிஎம் அவர்களின் பரிந்துரைகள் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இ.மி.ச. இன் விநியோக ஒருங்கிணைப்பு குழு (டிசிசி), சபை பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர், 33kV ஊசி புள்ளிகள் மற்றும் 33kV/11kV முதன்மை துணை மின்நிலையங்களை லெகோ மின் விநியோகத்திற்காக சமர்ப்பிதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்காக ஒரு குழுவை நியமித்துள்ளது. இந்த குழு தற்போது இந்த விவகாரத்தை பரிசீலித்து வருகிறது.

லெகோவின் பொறியியல் பிரிவின் முன்னாள் தலைவரான திரு. குணசேகர அவர்களின் ”2015 மார்ச் மாத அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பணியின் போட்டி நிலை நிலை காரணமாக, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ”விநியோக உரிமதாரர்களுக்கு (DLs) சொந்தமான லெகோ வழங்கல் நிலையப் பிரச்சினையை லெகோவின் திரு. பிஎஸ்என் டி சில்வா மற்றும் லெகோவின் முன்னாள் சிஎ∴ப்ஓ திரு. டுபிள்யூ.டி.ஏ.எஸ். பெரேரா ஆகியோர் தீர்த்துவைப்பர். அத்துடன், விற்பனை உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் வழிவகை செய்வார்கள்.
இந்த விடயம் தொடர்பில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு லெகோ பியூஎஸ்சிஎல் இனைக் கோரியுள்ளது

**சிபிசி உடனான உடன்படிக்கை**
சிபிசி உடனான எரிபொருள் விநியோக உடன்படிக்கை இன்னும் பேச்சுவார்த்தையில் உள்ளது. இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. எனவே உடன்படிக்கை இன்னும் இறுதியாக்கப்படவில்லை

| | | |
|---|---|---|
| (இ) இ.மி.ச. இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங் களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதி யாக பயன்படுத்தப்படாததன் | அனைத்து செயற்திட்டங்களுக்கும் அர்ப்பணிப்பு கட்டணம் பொதுவானதாக உள்ளதுடன் செயற்திட்டம் உரியவாறு பட்டியலிடப்பட்டிருப்பினும், கடன் உடன்படிக்கைகளிலுள்ள கடுமையான | மேலதிக தரகுக் கட்டணங்களை தவிர்க்க திட்டமிட்டபடி செயற்திட்ட நடவடிக் கைகளை செயல் |

| | | |
|---|---|---|
| காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவரால் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 92,693,772 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | நிபந்தனைகள் காரணமாக அதைத் தவிர்க்க முடியாதுள்ளது.<br>இருப்பினும், மேற்கண்ட நிலுவையில் 3 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 38,881,225.27 தொகை இ.மி.ச. ஆல் பொறுப்பேற்கப்படவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டிற்காக தூய எரிசக்தி வலைப்பின்னல் வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு எந்த அர்ப்பணிப்பு கட்டணமும் காணப்படவில்லை. | படுத்த வேண்டும். |
| (ஈ) நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 – 2037 இன் படி, 500 MW, 657MW மற்றும் 430MW புதிய மின்பிறப்பாக்கத்தை முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய 1587 MW மேலதிக இயலளவில் 381.85 MW இயலளவுடைய மின்வலு ஆலைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால், புதிய பின்பிறப்பாக்க ஆலைகளை அமுல்படுத்தலின் செயல் முன்னேற்றம் மிகக் குறைவாக காணப்பட்டதுடன் குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை வழங்குகின்ற குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை.<br>அதன் விளைவாக, ரூபா 22.2 பில்லியன் பெறுமதியான 811Ghw எரிசக்தி, அவசரக் கொள்வனவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இ.மி.ச. நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டங்களைத் தயாரித்தாலும், LTGEP களில் இனங்காணப்பட்ட இத்தகைய நிலையங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள இ.மி.ச. இற்கு எவ்வித அதிகாரம் இல்லை. இ.மி.ச. ஏனைய முகவர் நிலையங்களை பெரிதும் சார்ந்துள்ளதுடன் PUCSL இனால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க "மின்சாரம் (கொள்வனவு) விதிகள் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த செயல்முறைகளில் சில ஒன்றை ஒன்று விஞ்சுவதாக உள்ளன.<br><br>உதாரணமாக, ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 2016 இன் 02 ஆம் இலக்க பிரிவு 2 (xi) மின்சாரம் (கொள்வனவு) விதியின் படி, மின்பிறப்பாக்க இயலளவை கொள்வனவு செய்வதற்கு முன்னர், மின்சக்தி சட்டத்தின் பிரிவு 43 (2) இன் கீழ் தேவைப்படும் ஆவணங்களுடன் இணைத்து பிரேணைக்கான வரைபுக் கோரிக்கைக்கு முன்கூட்டிய அனுமதியை இ.மி.ச. பெற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும், அதே பிரேரணை வரைபுக் கோரிக்கை ஆவணத்தை தேசிய கொள்வனவு வழிகாட்டுதல்களின் படி நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவிற்கும் (பெரும்பாலும் SCAPC) சமர்ப்பித்தல் வேண்டும். PUCSL அங்கீகரித்த வரைபுப் பிரேரணை SCAPC இனால் மாற்றப்படும் அல்லது SCAPC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் PUCSL ஆல் மாற்றப்படும். மீண்டும், இந்த ஆவணம் மறுஆய்வு செயல்முறைக்குச் சென்று ஒப்புதலுக்காக இந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>**கொள்கைகள் மற்றும் பண்புகளை மாற்றுதல்**<br>மேலும், தொடர்ந்து கொள்கைகளை மாற்றுதல், நடப்பு மின் கொள்வனவின் முக்கிய பண்புகளை இடைநடுவில் மாற்றுதல் (தொழில்நுட்பம், இடம், உரிமையாளர் மாதிரி BOO இலிருந்து BOT க்கு மாற்றுதல் போன்றவை) மற்றும் ஒரு முதிர்ச்சிக் கட்டத்தில் ஒரு மின் திட்டத்தை முழமையாக இரத்துச் செய்தல், கொள்வனவு மாதங்கள் மற்றும் ஆண்டுகளில் கணிசமான பின்னடவை ஏற்படுத்தும். | குறைந்த கிரயத்தில் இலக்குகளை அடைவதற்காக நீண்ட கால தலைமுறை விரிவாக்கத் திட்டத்தின் படி மின் உற்பத்தி நிலையங்களை விரைவாக இயக்குதல் வேண்டும். |

**நிதி பற்றாக்குறை**
நிதியைப் பாதுகாப்பதில் தாமதங்களும் உள்ளன (அறிக்கையில் வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சீதவக கங்க நீர்மின் விடயத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி).

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் பிரிவு 38 இன் கீழ், சபையின் சேவைகளின் அபிவிருத்தி கிரயத்தின் நியாயமான விகிதத்தை (மேலும்) பூர்த்தி செய்ய சபையின் வருவாய் போதுமானதாக இருப்பதை உறுதி செய்யும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இ.மி.ச. இன் அதிகாரத்தின் கீழ் (இ.மி.ச. சட்டத்தின் பகுதி ஏ இன் கீழ்) காணப்பட்ட ”கருவி”, அதாவது கட்டணங்கள் மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரமானது, 2009 இலிருந்து நீக்கப்பட்டு இலங்கை மின்சார சட்டத்தால் PUCSL க்கு வழங்கப்பட்டது. அதுமுதல், இ.மி.ச. அதன் சொந்த நிதியிலிலிருந்து எந்த ஒரு அபிவிருத்திப் பணிகளையும் செய்ய முடியவில்லை.

மேலும், பிற அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் சட்டங்கள் காரணமாக, கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதிகளின் அனைத்து கோரிக்கைகளும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாகவே அனுப்பப்பட வேண்டும். அரசாங்க நிதியியல் துறையில் காணப்படுகின்ற தடைகளால் ஏற்பட்டுள்ள நிதி பற்றாக்குறை காரணமாக, பரிமாற்றம் மற்றும் மிக்பிறப்பாக்க செயற்திட்டங்கள் தாமதமாகலாம்.

| | | |
|---|---|---|
| (உ) உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக்குறை தொடர்பாக 3 ஆண்டுகள் தாமதிக்கப்பட்டு 2017 ஏப்ரல் மாதத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா ரூபா 2,510,056 பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் 6 ஆண்டுகளிற்குப் பின்னரே பொருட்கள் கிடைத்ததாக குறிப்பிட்டு மற்றொரு உத்தியோகத்தருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றுடன் (வழக்கு இல. பீ/1164/15) தொடர்புடைய ரூபா | **இருப்புப் பற்றாக்குறை ரூபா 2,510,056**<br>டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2017.05.04 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குழுவொன்றை நியமித்திருந்ததுடன் அக்குழுவின் அறிக்கை 2019.10.03 ஆந் திகதி டிஜிஎம் (வட மாகாணம்) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியக் காப்பாளரான திரு. ஜே.எம்.அசங்க ஜெயகொடி (பி.எ.்.ப். இலக்கம் 37432) இடமிருந்து இருப்புப் பற்றாக்குறையான ரூபா 2,510,056.88 (சபைக் கட்டணம் உள்ளடங்கலாக) இனை அறவிடுமாறு டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2019.10.09 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்தார். களஞ்சியக் காப்பாளர் 2019 அக்டோபரில் டிஜிஎம் (என்சிபி) க்கு இடமாற்றப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மீதி (ரூபா 2.5 மில்லியன்) ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏஜிஎம் (டிடி 1) தனது 2019-11-28 ஆந் திகதிய DGM/(C&C)/DD1/HRO/ADMN/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை | கையிருப்பு பற்றாக் குறைக்கு காரணமான அதிகாரிக்கு எதிராக முறையான விசாரணை நடத்தி, கையிருப்பு பற்றாக்குறைக்கு காரணமான நபர்களிற்கு எதிராக எடுக்கப் பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கையை கணிசமான காலத்திற்குள் முடித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 39,551,696 தொகைக்கு எதிராக ரூபா 31,257,161 தொகை 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்பட்டி ருந்தது. எவ்வாறாயினும், இந்த இருப்பு பற்றாக்குறை தாமதத்திற்கு பொறுப்புடைய ஆட்களிற்கு எதிராக எந்தவொரு நடவடிக் கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். ஆயினும், திரு ஜெயகொடி அவரது 2020-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறையான விசாரணையை நடத்துமாறு கோரியிருந்ததுடன் அதன்படி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அத்துடன், முறையான விசாரணை முடிவுக்கு அமைய 180 தவணைகளில் இதனை அறிவிடுமாறு ஏஜிஎம் (டிடி1) தனது 2010.09.03 ஆந் திகதிய AGM(DD1)/DGM/(C&C)/HRO/DD1/162 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார்.<br><br>**இருப்புப் பற்றாக்குறை ரூபா 31,257,161**<br>பொருட்களை வழங்காது மோசடி செய்தமைக்காக ரூபா 22,584,800.00 தொகையான 25 சதவீத சபைக் கட்டணம் உட்பட ரூபா 28,331,000.00 தொகையினை ரிச்சர்ட்சன் ப்ராஜெக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இடமிருந்து அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தர் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளார். அத்துடன், இருப்புப் பொருட்களின் இழப்புச் சீராக்கத்திற்கான எந்தவொரு மாற்றத்தையும் இனங்காண்பதற்காக மேலதிக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சில சீராக்கங்களை செய்தபின்னர் இழப்பின் அளவு ரூபா 8.3 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, உள்ளக விசாரணை பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி களஞ்சியக் காப்பாளரான திரு உ.பி. உதரா குணரத்ன (பிஎ∴ப் இல. 37475) மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் B/1164/15 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. | |
| (ஊ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந் திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் அதே ஊழியர் இ.மி.ச. இன் இன்னொரு அலுவலக த்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் முன்னைய மோசடியைக் கருத்திற் கொள் | வழக்குத் தொடர்தல்கள் குறித்து சட்டமா அதிபரின் கருத்தை இ.மி.ச. கோரியுள்ளதுடன் நாட்டில் நிலவும் கோவிட் -19 நிலைமை காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. | இழப்பை அறவிடுவத ற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் ஏதேனும் மோசடி நடந்திரு ந்தால், கணிசமான காலத்திற்குள் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கை யின் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடி க்கை எடுத்து இ.மி.ச. இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ளாது மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 மாத்திரம் அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிரு ந்தது. | | |
| (எ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறை க்குப் பொறுப்பான உத்தியோக த்தர் ஒருவர் 2011 ஒக்டோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மை யான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகை யினை பதிவழிக்கும் செயற்பா ட்டில் சபை ஈடுபட்டுள்ளது. | கணக்காய்வு அறிக்கையின் படி, இருப்பு பற்றாக்குறை ரூபா 3,789,893.00 ஆகும். இருப்பினும், இருப்பு வேறுபாட்டை ஆராய்வதற்காக 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழு, இருப்பு பற்றாக்குறை தொகையை ரூபா 1,953,484.15 எனக் குறிப்பிட்டுள்ளது. திரு சமரசிங்க அவர்கள் 60 வயதை எட்டிய பின்னர் 2011-10-15 அன்று ஓய்வு பெற்றார். இருப்பு பற்றாக்குறை விவகாரத்தில் தீர்மானம் எடுக்கும் வரை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலுத்துவதை நிறுத்துவதற்கு அவரது ஓய்வின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பு பற்றாக்குறையை அறவிடாமை குறித்து விசாரிப்பதற்காக 03 டிஜிஎம்எம் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கை சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைக்கு ஒப்புதலைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | இழப்பை அறவிடுவத ற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் ஏதேனும் மோசடி நடந்திரு ந்தால், கணிசமான காலத்திற்குள் விசாரணை நடத்தி, விசாரணை அறிக்கை யின் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடி க்கை எடுத்து இ.மி.ச. இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். |
| (ஏ) கனரக மற்றும் சாதாரண வாடிக்கையாளர்களின் செயற் பாட்டிலுள்ள மற்றும் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோர் நிலுவைகளை அங்கீகரிக்க கணினி முறைமை நான்கு தனித்தனி கட்டுப்பாட்டு கணக்குகளை ஒதுக்கியிருந்த போதிலும், சில மாகாணங்கள் அனைத்து கடன்பட்டோர் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரு கட்டுப்பாட்டு கணக்கைப் பயன்படுத்தியிருந்தன. | பெரும்பாலான மாகாணங்கள் நிலுவைகளை தனித்தனியாக அடையாளம் காண உதவுகின்ற A 3600 இன் கீழ் உள்ள துணைக் கணக்குக் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன. | செயலில் உள்ள மற்றும் இறுதி செய்யப் பட்ட கடன்பட்டோர் நிலுவைகளை தனித்த னியாக அங்கீகரிக்க புறம்பான கட்டுப்பாட்டு கணக்குகளைப் பயன்படுத்த வேண்டும். |
| (ஐ) ரூபா 62,951,457,952 மதிப்புள்ள அணைகளின் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பெறுமதி பின்வருவனவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்றது.<br><br>**மின்வலு நிலையம்** — **பெறுமதி**<br>விக்டோரியா — 14,412,751,075.25<br>கொத்மலே — 22,087,081,294.30<br>உக்குவெல — 2,581,412,890.05<br>போவதென்ன — 1,968,826,674.74<br>ரந்தெனிகல மற்றும் ரந்தெம்பே — 21,901,386,018.15 | அணைக்கட்டுகளின் உரிமையை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மொத்தம் 62,951,457,952.49 | |
| | மேற்குறிப்பிட்ட அனைத்து மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான ஏனைய அனைத்து அணைகளும் இலங்கை மகாவலி அதிகாரசபையால் இயக்கப்பட்டு, பராமரித்து, நிர்வகிக்கப்படுகின்றது. இருப்பினும், நீர்த்தேக்க ங்களில் மின்சாரத்தை பிறப்பித்தல் வரையான நீர்வழிப்பாதையை மட்டுமே சபை கையகப்ப டுத்தியுள்ளதுடன் அவற்றை முழுமையாக இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் என்பன சம்பந்தப்பட்ட மின் நிலையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஒ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(2)(அ) இன் கீழ் நிறுவப்பட்ட தேய்மான ஒதுக்கத்துக்கு ரூபா 1 மில்லியன் தொகையானது சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலும் முறையான அடிப்படையொன்று இன்றியும் மாற்றப்பட்டிருந்தது. | 2020ல் ரூ. 1 மில்லியன் தேய்மானம் ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டதுடன் இது இ.மி.ச. இன் 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(2)(அ) இற்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் தொடரும். 2020.12.31 இல் உள்ளவாறு தேய்மானம் ஒதுக்கம் ரூபா 25 மில்லியன் ஆகும். 2021 முதல், தேவைப்பட்டால், அடுத்த ஆண்டு முதல் சபையின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேய்மான ஒதுக்கத்து க்கு பணத்தை மாற்ற சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். |
| (ஓ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(1)(அ) இன் கீழ் நிறுவப்பட்ட சுயக் காப்புறுதி ஒதுக்கத்துக்கு ரூபா 1,222,713,673 தொகையானது, சபையின் அங்கீகாரத்தைப் பெறாமலும் சரியான அடிப்படை ஒன்று இன்றியும் மாற்றப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில், மொத்த நிலையான சொத்துக்களில் 0.1% 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் பிரிவு 47(1)(அ) இன் கீழ் நிறுவப்பட்ட சுய-காப்பீட்டு ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டதுடன் 2021 முதல், தேவைப்பட்டால் அடுத்த ஆண்டு முதல் வாரிய அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காப்பீட்டு ஒதுக்கத்து க்கு பணத்தை மாற்ற சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். |
| (ஔ)நாடளாவிய ரீதியில் பரந்து கிடக்கும் இ.மி.ச. இன் காணிகளின் அளவீடு, மதிப்பீடு மற்றும் பாதுகாப்பை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இ.மி.ச நிலங்களின் அளவீடு மற்றும் மதிப்பீட்டை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2021-08-26 நிலவரப்படி இ.மி.ச. இன் நிலங்களின் அளவீடு மற்றும் மதிப்பீட்டின் முன்னேற்றத்தின் படி, மேலதிகமாக 1,300 நிலங்கள் அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன. | இ.மி.ச. இன் காணி களின் அளவீடு மற்றும் மதிப்பீடு செயல் முறையை துரிதப்ப டுத்த வேண்டும் |

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 26,751,970,000 மொத்த நுகர்வுப்பொருள் கையிருப்பில் 10 சதவீதத்தை பிரதிநிதித் துவம் செய்கின்ற ரூபா 2,667,400,265 ஆனது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி கூற்றில் மெதுவாக நகரும், நகராத மற்றும் சேதமடைந்த இருப்புக்களாக | கணக்கெடுப்பு குழுக்களின் பரிந்துரை மற்றும் சபை ஒப்புதல்களைப் பெறுவதன் மூலம் மெதுவாக நகரும், நகராத மற்றும் காலாவதியான இருப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, விநியோக பிரிவு 2 ஏற்கனவே ரூபா 38,947,687.46 பெறுமதியான மெதுவாக நகரும இருப்புக்களை அகற்றுவதற்காக சபை ஒப்புதலைப் பெற்றுள்ளது. | சேதங்கள், இருப்பு வைத்திருக்கும் செலவு மற்றும் மோசடி போன்ற வற்றைத் தவிர்க்க, அசையாத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களை குறைப் பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டுள்ளது. இந்தளவு அதிகமாக நகராத மற்றும் மெதுவாக நகரும் இருப்புக் களை பராமரிப்பதனால் அது சேதங்கள், இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் மற்றும் மோசடி போன்றன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும். | | கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மின் பிறப்பாக்கப் பிரிவினால் செயல் நடவடிக்கைத் திட்டத்தி லுள்ள 76 செயற்பாடுகளில் 16 செயற்பாடுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செயல்பாட்டுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள நிதிசார் செயன்முன்னேற்றமானது செயல்பாடுகள் நடைபெற்று வருகின்ற 16 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றத்தை மாத்திரமே காட்டுகின்றன. | திட்டத்தில் கூறப்பட்டு ள்ள செயல்பாடுகளை விரைந்து முடிக்க வேண்டும். |
| (இ) | ஏசிஇ பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கை (பிபிஏ) உடன் தொடர்பான ஆகக்குறைந்த உத்தரவாத எரிசக்தி தொகை (எம்ஜிஇஏ) ஆண்டுக்கு 697,674,432 கிலோவாட் ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 24.42 கட்டண வீதத்தில் வழங்கப்பட்ட எரிசக்தி 475,831,835 கிலோவாட் ஆகும். அதன்படி, மீளாய்வா ண்டில் வழங்கப்படாத 221,842,597 கிலோவாட் எரிசக்திக்காக இயலளவுக் கட்டணம் செலுத்தப்பட்டிரு ந்தது. மேலும், குறுங்கால அடிப்படையில் தென் மாகாண த்திற்கு மின்சாரம் வழங்குவத ற்காக மாத்தறையில் 20 மெகாவாட், ஹம்பாந்தோட்டை யில் 24 மெகாவாட் மற்றும் காலியில் 24 மெகாவாட் எரிசக்தி கொள்வனவு உடன்படிக்கைகள் கையெழுத் திடப்பட்டன. அதன்படி, இந்த ஆலைகளிலிருந்து ரூபா 4,069,542,205 பெறுமதியுடைய 130,526,364 கிலோவாட் மொத்த மின்சாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆலைகளின் ஒரு அலகின் விலை முறையே ரூபா 28.30, ரூபா 36.84 மற்றும் ரூபா 39.52 ஆகக் காணப்பட்ட போதிலும், சராசரி விற்பனை | மின்சக்தி நிலையங்கள் அதன் எரிசக்தி கிரயத்தின் அடிப்படையில் நிகழ்நேரத் தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை அனுப்புகின்றமையை கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதுடன், ஆலைகளின் கிடைப்பனவின் அடிப்படையில் இயலளவுக் கட்டணம் செலுத்துவதற்காக மாத்திரமே எம்ஜிஇஏ கருத்திற் கொள்ளப்படுவதால் எம்ஜிஇஏ உடன் மின்பிறப்பாக்க அனுப்புதலை ஒப்பிடுவது யதார்த்தமானது அல்ல. அதனால் எம்ஜிஇஏ இற்கும் நிகழ்நேர எரிசக்தி அனுப்புதலுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை. அத்துடன் மேற்படி மின் உற்பத்தி நிலையங்களான ACE மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி உப மின்நிலையங்கள் ACE எம்பிலிப்பிட்டிய மின் ஆலைக்கு மேலதிகமாக உண்மையான நேரத்திற்குரிய கேள்வியை பூர்த்தி செய்வதற்காகவே மின்சாரத்தை அனுப்புகின்றது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இ.மி.ச. எப்பொழுதும் குறைந்த கியரத்துடன் கூடிய ACE எம்பிலிப்பிட்டிய ஆலைகளை அதிக மாறும் கிரயத்துடன் கூடிய ACE மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி உப மின் நிலையங்களிற்கு பதிலீடாக பயன்படுத்துகின்றது. இறுதியாக, நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய தகுதி உத்தரவின் அடிப்படையில் அனைத்து அனல்மின் ஆலைகளும் மின்சாரத்தை அனுப்புகின்றன. | அதிக செலவில் அவசர மின் உற்பத்தி நிலை யங்களைப் பயன்படுத் துவதற்குப் பதிலாக நிகழ் நேரத் தேவையைப் பூர்த்தி செய்ய குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின் உற்பத்தி நிலையங் களை இயக்குதல் வேண்டும். |

விலை ரூபா 16.72 ஆகும். எனவே, இந்த ஆலைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட எரிசக்தியை எம்பிலிப்பிட்டிய ஆலையிலிருந்து பெறக்கூடியதாக காணப்படுகின்றமையால் எரிசக்தி கொள்வனவுக்கான அதிகப்படியான கிரயத்தை குறைத்திருக்க முடியும். மேலும், அதிக கிரயத்தில் அவசர மின் நிலையங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உச்சத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இ.மி.ச. இற்கு சொந்தமான ஆலைகள் இயக்கப்பட வேண்டும்.

## 3.4 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் படி, 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், 390 மெகாவாட் இயலளவுடைய என்சிஆர்இ செயற்திட்டங்களுக்காக 7 கொள்வனவுகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்ததுடன், 24 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் மட்டுமே 2020 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருந்தன. | என்சிஆர்இ செயற்திட்டங்களில் இருந்து மொத்தம் 390 மெகாவாட் மொத்த இயலளவுடைய எரிசக்தியை கொள்வனவு செய்வதற்கு ஏழு விலைமனுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.<br><br>2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றது. ஆகையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜூலை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.<br><br>எனினும், 6 கேள்விமனுக்களின் நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.<br><br>• வவுணதீவில் 10 மெகாவாட் சூரிய மின்வலு ஆலை: 2017 செப்டம்பர் இல் கேள்விமனு திறக்கப்பட்டதுடன் 2018 மே இல் LOI வழங்கப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக SLSEA ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்கவும் உரிய நிறுவனங்களிடமிருந்து | என்சிஆர்இ செயற்திட்டங்களுக்கான கொள்வனவு செயல்முறையை விரைவுபடுத்த வேண்டும். |

தேவையான அனுமதிகளை பெறவும் அபிவிருத்தியாளருக்கு முடியாது போயிருந்தமை காரணமாக 2020.12.31 வரையிலும் கூட PPA கையெழுத்திட முடியாதிருந்தது.

- 10 மெகாவாட் பொலன்னறுவை சூரியமின் உற்பத்தி நிலையம்: 2017 பெப்ரவரி இல் கேள்விமனு திறக்கப்பட்டதுடன் 2018 செப்தெம்பர் இல் LOI கையெழுத்திடப்பட்டது. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக SLSEA ஆல் அடையாளம் காணப்பட்ட நிலத்தைப் பாதுகாக்கவும் உரிய நிறுவனங்களிடமிருந்து தேவையான அனுமதிகளை பெறவும் அபிவிருத்தியாளருக்கு முடியாது போயிருந்தமை காரணமாக 2020.12.31 வரையிலும் கூட PPA இல் கையெழுத்திட முடிந்திருக்கவில்லை.
- 1MW * 90 சூரியமின் ஆலை கேள்விமனு. 2018 ஏப்ரல் இல் கேள்விமனுக்கள் திறக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் 84 நிறுவனங்களுக்கு 2018 அக்டோபர் முதல் 2019 ஆகஸ்ட் வரை கேள்விகள் கையளிக்கப்பட்டன. கேள்விப்பத்திர பிணைவைப்பு காலாவதியானதாலும் அதனை கேள்விதாரர்கள் நீடிக்காமையாலும் 6 கேள்விதாரர்களுக்கு கேள்விகளை வழங்க முடியவில்லை. 14 கேள்விப் பத்திரங்கள் பிற்போடப்பட்டமையால் (84 கேள்விப்பத்திரங்களில்) 70 LOI மாத்திரமே வழங்கப்பட்டன. 35 பிபிஏ கள் 2020.12.31 இல் கையெழுத்திடப்பட்டதுடன், மீதமுள்ள அபிவிருத்தியாளர்கள் 2020.12.31 வரை தேவையான அனுமதிகளை சமர்ப்பித்திருக்கவில்லை.
- விவசாயம்/பன்னையுடன் கூடிய 10 மெகாவாட் சூரியமின் ஆலை. கேள்விமனுக்கள் 2019 மே இல் திறக்கப்பட்டதுடன் கேள்விகளை கையளித்தல் 2020 யூன் இல் செய்யப்பட்டது. LOI இல் கையொப்பமிடுவதற்குத் தேவையான ஆவணங்களை அபிவிருத்தியாளர்களால் 2020.12.31 இற்குள் பெற முடியவில்லை.

- 1-10 மெகாவாட் வீச்சுடைய 60 மெகாவாட் காற்றாலைகள். ஐந்து கிரிட் உபமின் நிலையங்களுக்கான கேள்விமனுக்கள் 2020 மார்ச் மாதம் திறக்கப்பட்டது. போலவத்த மற்றும் கப்பல்துறை கிரிட் உப மின்நிலையங்களுக்கு (ஜிஎஸ்எஸ்) கேள்விமனுக்கள் வழங்கப்படாமையால் 25 மெகாவாட் கையளிக்கப்படவில்லை. திருகோணமலையில் உள்ள GSS இற்கு 10 மெகாவாட் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் 2020.12.31 அன்று வழங்கப்பட்டது. மன்னார் ஜிஎஸ்எஸ் -க்கு வழங்கப்படும் 15 மெகாவாட் இனை வழங்குவதற்காக 2020.12.31

| | | |
|---|---|---|
| | வரை அமைச்சரவையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கப்பட்டது. மாதம்பே ஜிஎஸ்எஸ்-இற்கு வழங்கப்படும் 10 மெகாவாட் இற்காக 2020 நவம்பர் இல் மீண்டும் கேள்வி மனுக்கள் கோரப்பட்டு 2020.12.31 இல் கேள்விகோரல் காலம் முடிவடையும் நிலுவையில் இருந்தது.<br><br>• 150 மெகாவாட் சூரியமின் ஆலை கேள்விமனு (1-10 மெகாவாட் வீச்சு). 2020 யூலை இல் கேள்விகள் மூடப்பட்டன. TEC மதிப்பீடுகள் நிறைவடைந்து 2020 ஒக்தோபரில் SCAPC க்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2020.12.31 வரை அமைச்சரவையால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.<br><br>2020 மார்ச் முதல், கோவிட் 19 தொற்றுநோய் முதல் அலை நாட்டில் ஏற்பட்டதுடன் இரண்டாவது அலை 2020 ஒக்டோபர் இல் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது பெரும்பாலான செயல்பாடுகளை பாதித்திருந்ததுடன் ஏறத்தாழ அனைத்து வேலைகளிலும் தாமதத்தை ஏற்படுத்தியது. | |
| (ஆ) ஒவ்வொன்றும் 1 மெகாவாட் இயலளவுடைய 60 சூரிய மின் உற்பத்தி ஆலைகளை கொள்வனவு செய்யும் பிரேரணைகளுக்கான கோரிக்கை (ஆர்எ்.ப்பி) 2017 பெப்ரவரி 20 அன்று வரவழைக்கப்பட்டது. 38 ஆலைகளுக்காக 65 கேள்விமனுக்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன் 36 வெற்றிகரமான கேள்விமனு தாரர்களில் 35 ஆலைகளுக்கு கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 12.73 முதல் ரூபா 18.37 வரையிலான விலை வீச்சில் ஆர்வ வெளிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டது. ஆலைகளின் நீடிக்கப்பட்ட ஆரம்பித்தல் காலம் 2020 திசெம்பர் 31 அல்லது அதற்கு முன்னதாக காணப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 ஆலைகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | 2009-04-08 அன்று மின்சாரச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் போட்டிமிக்க கேள்விமனு முறை மூலம் சூரியசக்தி பிவி மின்வலு நிலையங்களை கொள்வனவு செய்வதற்காக இ.மி.ச. வெளியிட்ட முதல் கேள்விமனுக் கோரல் இதுவாகும். அதற்கும் மேல், தொழில்துறையில் புதிதாக இணைந்துள்ள சிறிய அளவிலான செயற்திட்ட ஆதரவாளர்களின் பரந்த பங்கேற்பை சாத்தியமாக்கியமாக்கும் வகையில் ஒரு ஆலையின் அதிகபட்ச கொள்ளளவை 1 மெகாவாட்டாக மட்டுப்படுத்தும் கொள்கைத் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தது. எனவே, இந்த முயற்சி இ.மி.ச. மற்றும் செயற்திட்ட ஆதரவாளர்கள் ஆகிய இருவருக்கும் ஒரு கற்றல் செயல்முறையாகும்.<br><br>அத்துடன், 2018-02-08 அன்று LOI ஐ வழங்கிய பின்னர், பின்வரும் மோசமான நிலைமைகள் நாட்டில் ஏற்பட்டதுடன், இது செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தை கடுமையாக பாதித்தது.<br><br>1. 2018 நவம்பர் முதல் 2019 ஜனவரி வரை பணிப்பாளர் சபை காணப்படவில்லை.<br>2. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் 2019 இறுதி வரை நாட்டை முடக்கியது.<br>3. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து உலகளவில் கோவிட் -19 தொற்றுநோயின் அலைகள் அவ்வப்போது ஏற்பட்டதுடன் 2020 மார்ச் முதல் 2021 யூன் வரை உள்ளூர் பூட்டுதல் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.<br><br>எனவே, சூழ்நிலைகளை கவனமாக மதிப்பீடு செய்து, 2021-06-30 வரையான வணிக நடவடிக்கைகளின் இலக்குகளை அடைவதற்காக சபை ஏற்கனவே கால நீடிப்புகளை | மின்வலு நிலையங்கள் ஆரம்பிப்பதை விரைவு படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கியுள்ளது. 2021-06-30 வரை, 27 செயற்றிட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதுடன், மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் இது ஒரு சிறந்த சாதனையாகும். | |
| (இ) 2020 ஆம் ஆண்டிற்கான தவிர்க்கப்பட்ட கிரய முறையின் மீது சிற்றளவு நீர்மின் ஆலைகளுக்கான விலை வீதம் குளிர் காலத்தில் ரூபா 19.51 ஆவதுடன் வறண்ட காலத்திற்கு ரூபா 21.25 ஆகும். தவிர்க்கப்பட்ட செலவு முறை அனல் ஆலை அனுப்புதலை அடிப்படையாகக் கொண்டதுடன் இது எரிபொருள் கிரயத்தை பொறுத்து மாறுபடும். எனவே, இந்த முறையின் மீது நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதம் சிற்றளவு நீர்மின் ஆலையின் உண்மையான கிரயத்துடன் எந்த தொடர்பை யும் கொண்டிருக்கவில்லை. நீர் மின்சாரத்தின் அலகொன்று க்கான சராசரி கிரயம் ரூபா 10 இற்கும் குறைவாக காணப் படுதல் வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டதுடன், இ.மி.ச. இன் நீர் மின்சாரத்தின் அலகொன்றுக்கான சராசரி கிரயம் ரூபா 2.49 ஆகும். மேலும், இது அலகொன்றுக்கான சராசரி விற்பனை விலையை விட ரூபா 16.72 அதிகமானதாகும். | NCRE மின்வலு உற்பத்தி நிலைய அபிவிருத்தி துறையில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக ஆரம்பத்தில் தவிர்க்கப்பட்ட கிரய அடிப்படையிலான கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்த முறையிலுள்ள குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு, “கட்டண பிரதிபலிப்பு, தொழில்நுட்பம் குறிப்பிட்ட மூன்று அடுக்கு கட்டணம்“ என அடையாளம் காணப்பட்ட புதிய கட்டண முறைமை 2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இந்த முறைமை ஒரு போட்டி கேள்விமனு செயல்முறைக்கு மாற்றப்பட்டதுடன் அற்கமைய சந்தை சக்திகளால் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. | தவிர்க்கப்பட்ட செலவு முறையின் கீழ் தற்போது இயக்கப்படும் மினி ஹைட்ரோ மின்வலு ஆலைகளு க்கு பயன்படுத்தப்படும் கட்டண முறையை அல்லது கட்டணத்தை மாற்றுவதற்கான சாத்தி யத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (ஈ) சூரியசக்தி மின் நிலையங்களுக்கான ரூபா 23.10 சமவிகித வீதம், நியமக் கட்டணமாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய மின்சார சட்டத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் மரபுசாராத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (என்சிஆர்இ) செயற்திட்டங்கள் அவற்றின் கொள்வனவுகளிற்கு நியம கட்டணத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், ஒவ்வொன்றும் 10 மெகாவாட் இயலளவுடைய ஐந்து சூரிய மின் உற்பத்தி நிலையங்கள், கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானி க்கப்பட்ட கட்டணங்களைப் | 2009-04-08 முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டது. இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு 2017 வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. | மரபுசாரா புதுப்பிக்க த்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்துவதற்குப் பதிலாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நியமக் கட்டணத்தின் கீழ் தொடங்கப் பட்டிருந்தன. (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2014 இல் கையெழுத் திடப்பட்டன). புதிய சூரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு (1MW x 60) 2017 இல் நடத்தப்பட்ட கொள்வனவு சபை மூலம் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்கள் ரூபா 12.73 முதல் ரூபா 18.37 வரையான வீச்சில் காணப்பட்டன. | | |
| (உ) கொள்வனவு நடைமுறைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட வலை வீதங்களுக்குப் பதிலாக 2014 மார்ச் 07 அன்று அமைச்சர வையால் அங்கீகரிக்கப்பட்ட நியமக் கட்டணமானது, 2013 ஆகஸ்ட் 06 க்குப் பிறகு தொடங்கப்பட்ட மொத்தம் 135.62 மெகாவாட் இயலள வுடைய உயிர் எரிவாயு ஆலை, தென்ட்ரோ மின்வலு நிலைய ங்கள், சிற்றளவு நீர்மின் ஆலைகள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி (மின்வலு கொள்வனவு உடன்படிக்கைகள் 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னர் கையெழுத்திடப்பட்ட) செயற்திட்டங்களிற்கு பிரயோகிக்கப்பட்டன. | 2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜூலை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. | மரபுசாரா புதுப்பிக்க த்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். |
| (ஊ) 2013 ஆகஸ்ட் 06 இற்குப் பின்னரான மரபுசாராத புதுப்பிக் கத்தக்க எரிசக்தி செயற்திட்டங் களிற்கு கொள்வனவு நடை முறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், ஒரு கிலோவாட் இற்கு ரூபா 36.20 வீதத்தில் கழிவை எரிசக்தியாக மாற்றுகின்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஐந்து மாநக ராட்சி திடக்கழிவு ஆலைகள் (20 வருடங்களுக்கு சமவிகித கட்டண) செயற்திட்டங்களிற்கு அமைச்சரவை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒரு திடக் கழிவு ஆலைக்கான மின் கொள்வனவு ஒப்பந்தம் 2020 திசெம்பர் இல் | 2013-08-06 க்குப் பிறகு மின்சக்தி கொள்வனவுக்காக கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடுவது சரியானதல்ல. உண்மையில், 2009-04-08 (மின்சாரச் சட்டம் இயற்றப்பட்ட தேதி) முதல் மின்சக்தியினை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், இந்த அணுகுமுறையின் நம்பகத்தன்மை குறித்து தொழில்துறையின் பங்குதாரர்களிடையே தெளிவற்ற தன்மை நிலவுகின்றமையால், போட்டி கேள்விமனு கோரல் மூலம் எரிசக்தி கொள்வனவு தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை (மூன்றாவது முறையாக) வழங்கும் வரை நியமக் கட்டண முறையின் கீழ் என்சிஆர்இ அடிப்படையிலான மின்சக்தி கொள்வனவு நியமக் கட்டண முறையைப் பயன்படுத்தி 2017 ஜூலை வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.<br><br>மேலும், தும்போவில கரடியான கழிவு (மாநகர சபை) மின்வலு செயற்திட்டத்திற்காக கொழும்பு | மரபுசாரா புதுப்பிக்க த்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக கொள்வனவு நடை முறைகளைப் பின்பற்ற வேண்டும். |

| | |
|---|---|
| கையெழுத்திடப்பட்டதுடன் அமைச்சரவை தீர்மானத்தின் படி திறைசேரியிலிருந்து ரூபா 36.20 தொகையில் ரூபா 13.10 திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமாயினும் கிலோவாட் ஒன்றுக்கு ரூபா 36.20 மொத்த கட்டணமும் இ.மி.ச. இனால் பொறுப்பேற்கப்படுகின்றது. | கழிவு எரிசக்தி (மாநகர நபை) மின்வலு செயற்திட்டத்திற்கான பிபிஏ-க்களில் கையெழுத்தி டுவதற்கு முறையே 2017-10-10 மற்றும் 2019-02-12 தேதியிட்ட அமைச்சரவை தீர்மானங்களுக்கு இ.மி.ச இணங்கியிருந்தது.<br><br>வெஸ்டர்ன் பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் எஞ்சிய பகுதியினை மீள்நிரப்புவதற்காக பொது திறைசேரிக்கு பட்டியிலிடப்பட்டுள்ளது. |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இ.மி.ச. இன் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் கனிஷ்ட நிறைவேற்றுநர்களுடன் தொடர் புடைய இ.மி.ச. இன் இரண்டு தொகுதிகள் ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதுடன அவை அதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் இறுதிக்கப்பட்ட பின்னர் விரைவில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். | ஆட்சேர்ப்புத் திட்டத் தை அபிவிருத்திசெய்து அதற்கு முகாமை த்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உடனடியாக நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமை யாளர் (ஆளணி) உள்ள போதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர் வுத் திட்டத்தில் (எல்ஓஆர்) குறித்துரைக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய சேவைகளான விசேடமாக மின் பொறியியலாளர்களிற்கு இப்பதவிகளை பெற்றுக் கொள்வது இயலுமான விதத்தில் இது வைக்கப்பட்டிருந்தது. | முக்கிய பதவிகளிற்குத் தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், டி.ஜி.எம் (பி) பதவிக்கு - முதலாம் வகுப்பு மனிதவள அல்லது வணிக நிர்வாக துறைகளில் முதுகலை பட்டம் பெற்ற எலக்ட்ரிக்கல் இன்ஜினியர் களே தெரிவு செய்யப்படுகின்றனர். | பிரிவுத் தலைவரின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சே ர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) தற்போதுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனிதவள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீத மானவை வெளியிலிருந்து நிரப்பப்ப டுவதுடன் அந்த சதவீதத்தை ஆண்டி ற்கு ஆண்டு படிப்படியாக 85 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு திட்டமிட ப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியியலாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்டகாலமாக மேவுகை செய்திருந்ததால் பதவியுயர்வுத் | தரப்பட்டுள்ள பரிந்துரைக்கு இடமளிப் பதற்காக, தற்போது விவாதத்தில் உள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் இ.மி.ச. பாரிய கட்டமைப்பு மாற்றங்களை செய்தல் வேண்டும். | வெளிவாரியாக ஆட் சேர்க்கப்பட்ட ஊழியர் களிற்கு தெளிவான பதவியுயர்வு முறையி னைக் காட்டும் விதத் தில் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டத்தில் அவ்வாறு வெளிவா ரியாக ஆட்சேர்ப்புச் செய்ய ப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) நேரடி யாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற் குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவன மொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக உள்ளமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடும் போது அது போதுமானதாக காணப்படவில்லை. | தரப்பட்டுள்ள பரிந்துரை சிரேஷ்ட நிறைவேற்றுநர்களின் புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இது ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உடனடி யாக அங்கீகாரம் பெறப்படுதல் வேண் டும். |
| (உ) சட்டத் திணைக்களத்திலுள்ள தலைமைச் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 யூன் 04 முதல் வெற்றிடமாகக் காணப்பட்டு வருகின்றது. | வெளிப்புற ஆட்சேர்ப்பு அடிப்படையில் பொருத்தமான சி.எல்.ஓவை நியமிக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளதுடன் தற்போது தொடர்புடைய பணிகள் இடம்பெற்று வருகின்றன. | நிறுவனத்தின் செயற் பாடுகளை வினைத்திற னாகவும் பயனுறுதியா கவும் பேணிச்செல்வ தற்கு பிரதான பதவி வெற்றிடங்கள் குறுகிய காலத்தில் நிரப்பப்ப டுதல் வேண்டும். |
| (ஊ) முக்கியமான மற்றும் இரகசியமான பதவியான பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவி 2016 யூலை 08 முதல் வெற்றிடமாக உள்ளதுடன் இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு சபையால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபையின் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு சபைச் செயலாளர் நேரடியாகப் பொறுப்பு வாய்ந்தவராக காணப்படுகின்றார். எவ்வாறாயினும், சபைக்கு ஒரு செயலாளரை வெளியிலிருந்து சேர்ப்பத ற்கான அனுமதியை சபை வழங்கவில்லை. | நிறுவனத்தின் செயற் பாடுகளை வினைத்திற னாகவும் பயனுறுதியா கவும் பேணிச்செல்வ தற்கு பிரதான பதவி வெற்றிடங்கள் குறுகிய காலத்தில் நிரப்பப்ப டுதல் வேண்டும். |
| (எ) செயற்திட்ட முகாமையாளர் (நிறுவன வள திட்டமிடல்) பதவி 2017 மே 29 முதல் 3 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிடமாக உள்ளதுடன் இப்பதவி மேல் மாகாண தெற்கு 1 இன் துணைப் பொது முகாமையாளரால் நிர்வகிக்கப் படுகின்றது. | செயற்திட்ட பணிப்பாளர் (நிறுவன வள திட்டமிடல்) பதவி 2017 ஆம் ஆண்டில் உள்வாரியாக இ.மி.ச. இல் விளம்பரப்படுத் தப்பட்டது. இருப்பினும் அந்த பதவிக்கு பொருத்தமான விண்ணப்பங்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இ.மி.ச. இன் பொது முகாமையாளர் திரு. ஜி.ஏ.டி.ஆர்.பி. சேனவிரத்ன அவர்கள் துணை பொது முகாமையாளர் (மேற்கு மாகாணம் தெற்கு 1) என்ற அவரது நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக 2017 மே 29 முதல் ஆறு மாத காலத்திற்கு செயற்திட்டப் பணிப்பாளர் (நிறுவன வள திட்டமிடல்) கடமைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளார். | நிறுவனத்தின் செயற் பாடுகளை வினைத்திற னாகவும் பயனுறுதியா கவும் பேணிச்செல்வ தற்கு பிரதான பதவி வெற்றிடங்கள் குறுகிய காலத்தில் நிரப்பப்ப டுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போட்டித்தன்மை வாய்ந்த கேள்வி கோரலின் மூலம் நிறுவன வள திட்டமிடல் செயற்திட்டத்தின் வடிவமைப்பு கட்டத்திற்கான ஆலோசகர்களாக M/s KPMG Sri Lanka தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், 2017 யூன் மாதத்தில் இது தொடங்கப்பட்டது. செயற்திட்டத்தின் வடிவமைப்பு கட்டத்தின் போது செயல்பாட்டுத் தேவை விவரக்குறிப்புகள், செயல்படாத தேவை விவரக்குறிப்புகள், RFP ஆவணங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் மேற்கொள்ளப் பட்டது. இ.மி.ச. இன் 1800 உயர்தொழில் வல்லுநர்கள் செயற்திட்டத்தின் வடிவமைப்பு கட்டத்தில் ERP அமைப்பை வடிவமைப்பதற்காக 80 செயலமர்வுகளில் கலந்து கொண்டனர். 07 வழிகாட்டல் குழுக் கூட்டங்களும் 65 ஏனைய கூட்டங்களும் மேற்படி காலப்பகுதியில் நடைபெற்றன. பின்னர் செயற்திட்டக்குழு ADB மூலம் செயற்திட்டத்திற்கான சலுகை நிதியைப் பெறுவதற்காக இதனை நிர்வகித்து வருகின்றது. இதையடுத்து கேள்விகோரும் பணி ஆரம்பிக்கப்பட்டு, அது இன்னும் இடம்பெற்று வருகிறது.<br><br>ஈஆர்பி முறைமையின் அபிவிருத்தி என்பது ஒரு சிக்கலான செயல்முறையாக உள்ளதுடன் இது ஆர்வமுள்ள தரப்பினரின் பங்கேற்பாகவும் உள்ளது. ஒரு ஈஆர்பி முறைமையை வெற்றிகரமாக முடிப்பதற்கு உயர்மட்ட நிர்வாகத்தின் தலைமைத்துவம் இன்றியமையாத முன்நிபந்தனையாகும்.<br><br>மேற்கூறிய உண்மைகள் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்து உரிய கவனம் செலுத்துதல் தற்போதும் இடம்பெற்று வருகின்றது. இ.மி.ச. இன் பணிப்பாளர் சபை செயற்திட்டப் பணிப்பாளர் (ஈஆர்பி) பதவியின் கடமைகளை மேற்கொள்ள திரு. செனவிரத்ன அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட காலத்தை நீட்டித்துள்ளது. | |
| (ஏ) ஏனைய பிரிவுகளில் மனித வளப் பற்றாக்குறை காணப்படுவதனைக் கருத்தில் கொண்டு சொத்து முகாமைத்துவ பிரிவின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பணிப்பாளர் சபையால் நிர்வாகத் திறமையின்மையைக் சுட்டிக்காண்பித்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 பதவிகளுக்கு மேலதிகமாக 28 ஊழியர்கள் | 2018 ஆளனித் திட்டத்தில் உள்ள 13 தொழில்நுட்ப துணைவர்கள் 2018-2020 இல் திறமையான தொழில்நுட்ப துணையாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். உள்ளக பதவி உயர்வு காரணமாக 2020-12-31 ஆம் ஆண்டில் திறமையான தொழில்நுட்பத் துணைவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற திறமையான தொழில்நுட்பத் வல்லுனர்கள் தங்களது தற்போதைய பணிநிலையங்க ளில் இதே | இந்த விடயத்தை திருத்துவதற்கு தேவை யான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இணைக்கப்பட்டுள்ளனர். | போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். இந்த உள்ளக பதவி உயர்வுகள் காரணமாக 2020-12-31 இல் உள்ள தொழில்நுட்பத் துணைவர்களின் எண்ணிக்கை 2018 பணியாளர் திட்டத்தில் காணப்பட்டதை விட குறைவாக உள்ளது.<br><br>இ.மி.ச. இன் கைப்பந்து அணியில் உள்ள 08 ஊழியர்கள் 2020 இல் ஆளனிக் கிளையிலிருந்து AM பிரிவின் பாதுகாப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டனர். அவர்கள் அலுவலக ஊழியர் பிரிவில் கடமையாற்றுவதுடன் இந்த இடமாற்றத்தின் காரணமாக, AM பிரிவிலுள்ள அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கை 2020 இல் அதிகரித்துள்ளது.<br><br>AM பிரிவுக்கு மாற்றப்பட்ட 05 தரவு உள்ளீர்த்தல் உத்தியோகத்தர்கள், AM பிரிவில் வெற்றிடமாக உள்ள நிர்வாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தட்டச்சர் பதவிகளின் கடமைகளை நிறைவேற்று கின்றனர். | |
| (ஆ) விநியோகப் பிரிவுகள் 01, 02, மற்றும் 04 இலுள்ள 35 பதவிகளுக்கு 1050 மேலதிக பணியாளர்கள் இணைக்கப்பட் டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், ஏனைய பிரிவுகளில் தற்போதுள்ள அத்தகைய பதவிகளின் பற்றாக்குறையின் காரணமாக ஊழியர்களின் ஒதுக்கீடு முறையான மற்றும் பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் ஆய்வு செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்படும். அதன்படி, பணியாளர் பற்றாக்குறை கண்டறியப்பட்ட இடங்க ளுக்கு மேலதிக பணியாளர்கள் ஒதுக்கப்படுவர். தொடர்புடைய வேலை வகைகளின் விரிவான பகுப்பாய்வுக்குப் பின்னர் இது மேற்கொள்ளப்படும். | இந்த விடயத்தை திருத்துவதற்கு தேவை யான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |